விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

• Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி

## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 363 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை (17.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

எதிர்வரும் 19ஆம் திகதிவரை

## வடக்குக் கிழக்கில் கனமழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கிடைத்து வரும்மழையானது தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி வரையும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

19

## காய்ச்சல் நீடித்தால் உடனடியாக வைத்தியசாலையை நாடுங்கள்

### யாழ்.போதனா பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி



(கொழும்பு)

யாரேனும் ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டு டெங்கு நோய் அறிகுறி ஏற்பட்டால் அருகில் உள்ள அரச வைத்தியசாலைகளில் குருதிப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருமான த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்

19

# சீரற்ற காலநிலையால் வடக்கு அதிகமாக பாதிப்பு

- வடக்கில் ஆயிரத்து 371 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 247 பேர் பாதிப்பு.
- கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னாரில் அதிகளவு பகுதி நீரில் மூழ்கியுள்ளது.
- தொடர்ந்து மழை பெய்யவுள்ளதால் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை.



சீரற்ற காலநிலையால் வட மாகாணத்தில் ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். 33 வீடுகள் அனர்த்தத்தில் சேதமடைந்துள்ளதாக அனர்த்த

04

## குவைத் மன்னர் காலமானார்



19

## குற்றங்களை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை


(அம்பலாங்கொடை)

திட்டமிடப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில் இன்று அதிகாலை முதல் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ள

19

## வாக்குப் பிச்சை கேட்கும் ராஜபக்ஷக்களை விரட்டுங்கள்

### அநுர குமார மக்களிடம் கோரிக்கை



(கொழும்பு)

ஆட்சி அதிகாரத்திலிருந்து மக்களால் வெளியேற்றப்பட்ட ராஜபக்ஷ அணியினர், எதிர்வரும் தேர்தலில் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

வாக்குப் பிச்சை கேட்கும் அவர்களை ஓட ஓட விரட்டியடிக்க வேண்டும் என்று மக்களிடம்

04

## விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் மரணம்

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வாய்த்தர்க்கம் முற்றியதில் விபரீத முடிவெடுத்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த கஜேந்திரன் தர்சினி (வயது-41) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

கணவன் மனைவிக்கு இடையில்

19

## முட்டை இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாப

19

கார்த்திகை பூக்கொடியின்

## கிழங்கை உட்கொண்ட குடும்பஸ்தர் மரணம்

### உடுத்துறையில் சம்பவம்

(கரணவாய்)

கார்த்திகை பூக்கொடியின் கிழங்கை உட்கொண்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதில் கொடுக்குளாய், உடுத்துறையைச் சேர்ந்த மாரிமுத்து சுப்ரமணியம் (வயது-47)

19

நல்லை ஆதீன குரு முதல்வருடன்

## இலங்கை வருகை தந்துள்ள 3 நாட்டு தூதுவர்கள் கலந்துரையாடல்



19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# துயர் பகிர்வு



எமது ஆலயத்தின் முன்னாள் அறங்காவலர்களில் ஒருவரான
அமரர் **சரவணமுத்து ஸ்ரீநிவாசன்** அவர்களின் துணைவியாரும்
தற்போதைய அறங்காவலர்களில் ஒருவரான **ஸ்ரீநிவாசன் பிரதீபன்** அவர்களின்
அன்புத் தாயாருமாகிய

அமரர்

## திருமதி தவனேஸ்வரி ஸ்ரீநிவாசன்

அவர்கள் கடந்த 13.12.2023 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வண்ணார்பண்ணை காட்டுத்தறை அருள்மிகு அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையாரை வேண்டிநிற்கின்றோம்.

வண்ணார்பண்ணை காட்டுத்தறை,
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில்,
இல. 07, ஒடை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

- முகாமைத்துவ சபையினர். -

(C-7919)


Happy New Year 2024

**கனடாவில் உயர்கல்வி**

**குறைந்த கட்டணத்தில்**
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு
உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள
வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
Whatsapp: 0094779265447
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

(18255)



**வீடு வாடகைக்கு உண்டு**

கொக்குவில் கிழக்கில் சகல
வசதிகளுடன் வீடு வாடகைக்கு
உண்டு. நேரில்
பார்வையிட அழையுங்கள்

**077 186 9951**

(18250)


## ஜகத் ஜயசூரியவுக்கு புதிய பதவி

புதிய பாதுகாப்பு செயலாளராக ஜெனரல் ஜகத் ஜயசூரியவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருக்கான நியமனம் ஜனவரி மாதத்தில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் ஜகத் ஜயசூரிய 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இலங்கையின் 20ஆவது இராணுவத் தளபதியாக கடமையாற்றினார்.

தற்போது பாதுகாப்பு செயலாளராக மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன பணியாற்றி வருகிறார். 2019 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இவர் பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு
18 - 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
**சம்பளம் :**
30,000/= - 50,000/= + மதிய உணவு

**077 937 0000, 075 988 1000, 021 221 7600**

(18232)



**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS**
பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன்
காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை
WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer
ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7923)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# 1 ஆம் ஆண்டு நினைவு தினம்



மலர்வு 25 . 02 . 1950

உதிர்வு 28 . 12 . 2022

2022.12.28 அன்று இறைபதமடைந்த எமது குல விருட்சம்

## அமரர் நடராசா சிவரட்ணம்

அவர்களின் 1ம் ஆண்டு நினைவு நாள் நாளை (2023.12.18) திங்கட்கிழமை முருகையன் கோவிலடி, வல்வெட்டித்துறை எனும் முகவரியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முருகையன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.


குடும்பத்தார்

(18261)

# நினைவலைகள்

43 ஆம் ஆண்டு    3 ஆம் ஆண்டு

17.12.2023



பிறப்பு: 17.08.1959 அமரர் இறப்பு: 17.12.1980

**மூத்ததம்பி தவராசா**
திதி : பஞ்சமி



பிறப்பு: 15.02.1952 அமரர் இறப்பு: 19.12.2020

**வேலுப்பிள்ளை கந்தசாமி**
திதி : பஞ்சமி

29 ஆம் ஆண்டு



பிறப்பு: 24.07.1901 அமரர் இறப்பு: 01.12.1994

**அம்பலவாணர் வேலுப்பிள்ளை**
திதி : துதியை

வானத்தை விட்டு
நிலவு பிரிந்தாலும்
பகலை விட்டு
சூரியன் பிரிந்தாலும்
எங்களை விட்டு
நீங்கள் பிரிந்தாலும்
உங்கள் அன்பு
என்றும் பிரியாது
எங்கள் அன்பும்
என்றும் பிரியாது

தகவல் : குடும்பத்தினர்
மகன் க.குணா
175, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(18207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரம் பாரியளவு வளர்ச்சி

## புள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கை

**(கொழும்பு)**

**கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் பாரிய அளவு வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.6 சதவீதமாக பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி 2,946 பில்லியன் ரூபாய் எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் விவசாயத் துறை 3 சதவீதமாகவும் கைத்தொழில் உற்பத்தித் துறை 0.3 சதவீதமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

## தேசிக்காயின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த மாதம் சடுதியாக அதிகரித்து காணப்பட்ட எலுமிச்சைப்பழத்தின் விலை தற்போது குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

2500 ரூபாவாக இருந்த ஒரு கிலோ எலுமிச்சைப்பழத்தின் விலை தற்போது 400 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது.

கடந்த மாதம் சில கடைகளில் எலுமிச்சைப்பழம் ஒன்று நூறு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

மேலும், சந்தைகளில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதுடன், தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சந்தைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# அதிபர்கள் இடமாற்ற முறையில் நெருக்கடி தீர்வை வழங்குமாறு அமைச்சிடம் கோரிக்கை

(கொழும்பு)

அதிபர்கள் இடமாற்ற முறைமையில் காணப்படும் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கோரிக்கையை அதிபர் சேவைகள் சங்க தேசிய அமைப்பாளர் சிசிர ராஜபக்ச முன்வைத்துள்ளார்.

இடமாற்ற பிரச்சனை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர்கள் இடமாற்றம் தொடர்பில் ஆளுநர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளினால் குறித்த முறைமை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அதிபர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே இப்பிரச்சினைகான தீர்வை உடனடியாக வழங்குமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாக அதன் தேசிய அமைப்பாளர் சிசிர ராஜபக்ச தெரிவித்துளார். (நி-5)

# இனவாதத்தை தூண்டும் முயற்சியில் பொலிஸார்

## கஜேந்திரகுமார் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)



இனவாதத்தைத் தூண்டிவிட்டு தமிழர்களின் உரிமையினை மறுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதை மயிலத்தமடு சம்பவம் நிரூபித்துள்ளதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மயிலத்தமடுவிற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட பலர் சென்ற நிலையில் பொலிஸாரினால் உட்செல்வ தற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதன்போது அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் தலைமையிலான குழுவினர் வருகை தந்து விளைவித்த குழப்பத்தினை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலாளரின் அறிவுறுத்தலையும் மீறிய வகையில் பொலிஸாரின் செயற்பாடுகள் காணப்பட்டதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (நி-5)

# சவேந்திர சில்வாவிற்கு இந்தியாவில் கௌரவம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அதிருப்தி

(லண்டன்)

போர்க்குற்றவாளியாக சர்வதேசத்தினால் பார்க்கப்படும் இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு டெஹ்ராடூனனில் உள்ள இந்திய இராணுவ கல்லூரியில் வரவேற்பு வழங்கப்பட்டமை தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இனப்படுகொலை குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நினைவேந்தல் மற்றும் கண்ணியம் நாளாக அறிவிக்கப்பட்ட டிசெம்பர் 9 அன்று, ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு வழங்கப்பட்ட இந்த மரியாதையால் தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இனப்படுகொலை மற்றும் பாரிய அட்டூழியங்களைத் தடுப்பதற்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

2019 ஒகஸ்ட் 19ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலெட், லெப்டினன்ட் ஜெனரல் சில்வாவின் பதவி உயர்வை கண்டித்தமையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதானி உருத்திரகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் 137 பக்கங்கள் கொண்ட விரிவான ஆவணத்தையும் சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளையும் தொகுத்துள்ளது.

இந்தநிலையில் உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை கொண்டுள்ள இந்திய இராணுவம், போர்க்குற்றவாளி என்று கூறப்படும் ஒருவரை தலைமை விருந்தினராக வரவழைத்தமை ஏற்புடையதல்ல என்றும் உருத்திரகுமாரன் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# பல்கலை மாணவர்கள் 4 மாதம் சமூக சேவையில்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் இடம்பெறும் வன்முறைகளை தடுக்கும் வகையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு நான்கு மாத கட்டாய சமூக சேவை வழங்கப்பட்டவுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இதன்படி புதிதாக உள்வாங்கப்படும் மாணவர்களை 4 மாதகால சமூக சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அடுத்த ஆண்டு 41,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# மோசடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் தொடர்பில் அவதானமாக இருங்கள் பொலிஸார் எச்சரிக்கை



(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்கள் என கூறி சாதாரண உடையில் வாகனங்களை சோதனையிட வருபவர்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வருபவர்களின் அடையாள அட்டையை சரிபார்க்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ வாகன சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர்களைப் போன்று விசேட பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிவில் உடை அணிந்து இவ்வாறான கடமைகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

ஆனால் வாகனங்களை சோதனையிட வருபவர்கள் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டால் எந்தவொரு சாரதியும் அடையாள அட்டையை சரிபார்த்துக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளியாட்கள் சிலர் பொலிஸாரின் பெயரில் இலஞ்சம் பெறும் நடவடிக்கைகள் அல்லது வாகனங்களில் பயணிக்கும் நபர்களின் பொருட்களை திருடும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்பதால் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதை தெரிவித்துள்ளார். (நி-5)

# சீரற்ற காலநிலையால் கிளியில் 3440 பேர் பாதிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலையால் 1086 குடும்பங்களை சேர்ந்த 3440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 9 வீடுகள் பகுதியளவில் சேத மடைந்துள்ளதாகவும் மாவட்டஇடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று பகல் 12.30 இற்கு வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கு...

கேட்டுக்கொள்கின்றேன் இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம். பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் விசேட தேசிய மாநாடு என்ற பெயரில் ராஜபக்ஷக்கள் தலைமையிலான ஸ்ரீல ங்கா பொதுஜன பெரமுனவினர் தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டைச் சீரழித்த அவர்கள், வெட்கம் இல்லாமல் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்கின்றனர். கடந்த வருடம் மக்கள் புகட்டிய பாடத்தை அவர்கள் மறந்துவிட் டார்களா? அல்லது போர் வெற்றிப் பேச்சுக் களை முழுங்கி மக்களை ஏமாற்றலாம் என்று அவர்கள் நினைக்கின்றார்களா? என்று தெரியவில்லை.

இந்த ராஜபக்ஷ பட்டாளம் இனிவரும் நாட்களில் வாக்குப் பிச்சை கேட்டு மக்க ளைத் தேடி கிராமங்களுக்கும், வீடுகளு க்கும் வரு வார்கள். அவர்களை மக்கள் ஓட ஓடவிரட் டியடிக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவோ அல் லது ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளுக்கு ஒருபோ தும் தீர்வைப் பெற்றுத் தரும் கட்சிகள் அல்ல.

தேசிய மக்கள் சக்திதான் நாட்டினதும் மக்களினதும் நலனுக்காகச் செயற்படும் ஒரேயொரு கட்சியாகும். எனவே, தேசிய மக்கள் சக் தியின் பின்னால் நாட்டு மக்கள் அனைவரும் அணி திரள வேண்டும் என்றார். (ம-7)

## சீரற்ற...

முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

212 குடும்பங்களை சேர்ந்த 700 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ப்பட்டுள்ளனர்.

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாண ங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் தொடர்ச் சியாக கடும் மழை பெய்து வருகின்றது இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத் தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங் களில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ் கியுள்ளன. முல்லைத்தீவில் வவுனிக் குளம் பெருக் கெடுத்தமையினால் மாந்தை கிழக்கு பகுதியின் தரைவழி போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட் டுள்ளது.

செல்வபுரத்தி லிருந்து சிவபுரத் திற்கு செல்லும் பிரதான வீதியிலும் துணுக் காயில் இருந்து நட்டாங்கண்ட லுக்கு செல்லும் பிரதான வீதியிலும் வெள்ளம் நிறைந்துள்ளது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிர தேச செயலகத்திற்கு உட்பட்ட பண்டா ரவன்னி, புளியங்குளம் பகுதிகளிலும் வெள்ளப்பெ ருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த பகுதியில் சுமார் 150 குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, உறவி னர் வீடுகளில் தங்கவைக்கப் பட்டுள் ளனர். இதனிடையே, சந்த வெளி - திகிலிவெட்டை இறங்குதுறை படகுப் பாதை நீரில் அடித்துச்செல்லப் பட்டதால், மக்கள் பெரும் அசௌகரி யங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொட ரும் மழை காரணமாக இரணைமடு ஐயன் கோவிலடி பகுதியை சேர்ந்த 23 குடும் பங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந் துள்ளனர்.

பலத்த மழையையடுத்து, இரணை மடு குளத்தின் 14 வான்கதவுகள் திறக் கப்பட்டுள்ள நிலையில், தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனையடுத்து, ஐயன்கோவிலடியை சேர்ந்த 23 குடும் பங்களின் 70 பேர் இடம் பெயர்ந்து, பாடசாலையொன் றில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

மழை பெய் யும் சந்தர்ப்பங் களில் காற்றின் வேகம் அதிகரிக் கலாம் என்பதால், விழிப் புடன் செயற் படு மாறு வளிம ண்ட லவியல் திணை க்களம் அறிவுறுத் தியுள்ளது. (ம-7)


**TOURISM VACANCY**

TOUR OPERATIONS ASSISTANT WANTED WITH
- ALL THREE LANGUAGES
- COMPUTER KNOWLEDGE
- SOCIAL MEDIA

ADVANTAGE FOR TOURISM DEGREE HOLDERS AND EXPERIENCE

+94777 360 353

(C-7922)

**ROOM BOY/ STEWARD**

யாழ் நகரில் இயங்கும் விருந்தினர் விடுதி/ உணவகத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு மோட்டார் சைக்கிள் (Two wheeler) ஆட்டோ லைசன்ஸ் உள்ளவர்கள் தேவை.

தொடர்பு - 0777 340 026


## கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பன் திரு. மகாராசா மோகனவர்மன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.

**மயில்வாகனம் மகாராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

ஆழ்ந்த அனுதாபங்கள்
யாழ்ப்பாண மருத்துவ பிரதிநிதிகள் சங்கம்

(C-7925)

# மரண அறிவித்தல்



## திருமதி தயாபரன் மான்விழி (வதனி)

பிறப்பு 06.10.1964

இறப்பு 16.12.2023

நெல்லியானைப் பிறப்பிடமாகவும் மூளாயை வதிவிடமாகவும் கொண்ட தயாபரன் மான்விழி (வதனி) அவர்கள் நேற்று (16.12.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதி யரின் அன்பு மகளும் கந்தசாமி தயாபரனின் ஆசை நாயகியும் லக்சிகா, சுவர்னிகா, முரளிவாசன் ஆகி யோரின் பாசமிகு தாயாரும் நிலசன், கோபால கிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வேல் விழி, கயல்விழி, தண்வழி காலஞ்சென்ற மாயவிழி மற்றும் தர்மவிழி, சாந்தஸ்ரீ ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனுகிஷின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது மூளாய் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் அக்னியுடன் சங்கமிக்கும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்

தொலைபேசி: 077 843 9610 (18264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுத்திர பாதுகாப்பு தலைமையகம் இலங்கையில்

## பிராந்திய நாடுகள் தீர்மானம்

(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு பிராந்திய நாடுகள் தீர்மானமொன்றை எட்டியுள்ளன.

மொரிஷியஸில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசகர்களின் மாநாட்டில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதுடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொழும்பு பாதுகாப்பு அறிக்கையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் கடல் மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, மேற்படி பிரேரணையை முன்வைத்துள்ளதுடன் மாநாடு அதற்கு இணங்கியுள்ளது. இதனால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. இந்தியப் பெருங்கடல் பாதுகாப்புத் தலைமையகம் எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டு, பின்னர் நிரந்தரக் கட்டடத்தில் நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

---

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்-12.10.1938 | மறைவு-14.12.2023



எமது வித்தியாசாலையின்
அதிபர் திரு.கு.திலீபன் அவர்களின் மாமனார்,

**அமரர். மாணிக்கர் தாமோதரம்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.

(8252)

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 04 - 1934 | மறைவு 12 - 12 - 2023



## திருமதி. விசாலாட்சிப்பிள்ளை முருகுப்பிள்ளை

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.விசாலாட்சிப்பிள்ளை முருகுப்பிள்ளை அவர்கள் *12.12.2023* ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சகுந்தலை தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னையா செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், முருகுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், சிவனருள், உதயகுமார், காலஞ்சென்ற சிவகுமார் (Bern) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயராணி (Dr), லோயனி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வின், அனிற்றா, பூஜா, அனிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, முத்தாச்சிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, குமாரசாமி மற்றும் சோதிலிங்கம், லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் *24.12.2023* இன்று ஞாயிற்றுக்கிழமை Holders hill Road,London NW7 1NB இல் அமைந்துள்ள Hendon Cemetery& Crematorium இல் காலை 8 மணியிலிருந்து 10 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-7918)

தொலைபேசி இலக்கம்
மகன்: +447849510806, 021 205 8055

தகவல்
குடும்பத்தினர்.

---

# வட இலங்கைச் சங்கீத சபை

## பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல்-2024

வட இலங்கைச் சங்கீத சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 1 தொடக்கம் தரம் 6 வரையான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் 17.12.2023 ஆம் திகதி முதல் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை வட இலங்கைச் சங்கீத சபையின் www.ncomsjaffna.com எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி- 17.01.2024**

17.01.2024 தொடக்கம் 2020.2023 ஆம் ஆண்டுக்கான கலாவித்தகர் பரீட்சைகள் நடைபெறும்.

**குறிப்பு:** 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை எமது இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

(சி-7917)

தலைவர்-பொ.ரவிச்சந்திரன் ,வட இலங்கைச் சங்கீத சபை,
மருதனார்மடம், சுன்னாகம்.

---

# இராசிபலன்

17.12.2023
மார்கழி 01, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முன்னிரவு 8.57மணிவரை

திருவோணம் முற்பகல் 8.05 மணிவரை
சுபநேரம் 9.22-10.52 மணிவரை
இராகுகாலம் 4.52-6.22 மணிவரை

சந்திராஷ்டமம்- புனர்பூசம்,

வளவன்

**மேஷம்** பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கடகம்** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**துலாம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும்.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**ரிஷபம்** அரைகுறையாக இருந்த காரியங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்.

**மிதுனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கலாம், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** மனநிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.


**தனுசு** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

எங்கு தன்னம்பிக்கை இல்லையோ அங்கு சாதனைகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாளுடன் ஒருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் கண்ணன் கோவில் பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2மணியளவில் வாளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டுவில் பகுதியில் குழுவொன்று வாள்களுடன் வீதியில் நிற்பதாக் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்ற நிலையில் மேற்படி இளைஞனை வாளுடன் கைது செய்துள்ளனர்.

வாள்களுடன் நின்ற ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் 21வயதான மேற்படி சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேக நபர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் எனவும் தற்போது மட்டுவில் பகுதியில் திருமணம் செய்து வசித்து வருவதாகவும் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (நி-5-30)



சுவிஸ் புங்குடுதீவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் "புங்குடுதீவு மாணவர்களுக்கான கௌரவிப்பு" நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)




கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படம்-சிவசாந்தன்)

# இ.போ.ச மீது தாக்குதல்

## பொலிஸார் தீவிர விசாரணை

(சாவகச்சேரி)



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் கண்ணாடி போத்தலால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைப் பகுதியில் இருந்து யாழ் நோக்கி ஏ9 வீதி ஊடாக வந்த பேருந்து மீதே கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம் முன்பாக வைத்து மோட்டார்சைக்கிளில் வந்தவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது பேருந்தின் வாயிற்கதவு கண்ணாடி சேத மடைந்துள்ளது.

மோட்டார்சைக்கிளில் பிரகாசமாக ஒளி எழுப்பியவாறு வந்தே மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது பேருந்தில் பயணித்த எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-30)

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் பொறியியல் விஞ்ஞான சிறப்பு மாணி 2023/2024 கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 02.01.2024க்கு முன்னர் இணைய வழி ஊடாக (www.ou.ac.lk) அல்லது பிராந்திய அலுவலகம் ஊடாக விண்ணப்பிக்கலாம் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புபவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் 021 222 3374 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1600 |
| தக்காளி | 750 | 650 | 550 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| கோவா | 450 | 400 | 400 | 500 |
| கரட் | 400 | 500 | 280 | 500 |
| பூசணி | 200 | 180 | 140 | 250 |
| புடோல் | 300 | 300 | 160 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 450 | 450 | 430 | 480 |
| பாகற்காய் | 800 | 500 | 600 | 800 |
| வெண்டக்காய் | 350 | 250 | 160 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 110 | 150 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 | 450 |
| லீக்ஸ் | 350 | 380 | 360 | 400 |
| பீற்றூட் | — | 600 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 600 |
| முருங்கைக்காய் | — | — | 1200 | 2000 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 200 | 200 |
| தேசிக்காய் | 1000 | 600 | 550 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 600 | 450 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 200 | 250 | — | 400 |
| பொன்னாங்காணி | 150 | 100 | 200 | 60 |
| வல்லாரை | 100 | 40 | 50 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 120 | 200 |

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2023 ஆம் ஆண்டுக்கான NVQ சான்றிதழ் முழுநேர கற்கை நெறிகளை எதிர்வரும் 2.1.2024 ஆம் திகதி அனைத்து பயிற்சி நிலையங்களிலும் ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கைநெறிகளாவன தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், கணனி படவடிவமைப்பாளர், முன்பள்ளி ஆசிரியர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், மின்னிணைப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், அறைபராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், வெதுப்பாளர், சமையலாளர், வரவேற்பாளர், கணனி வன்பொருள் திருத்துநர், கணனி பிரயோக உதவியாளர், குழந்தை பராமரிப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர், உதவி கணிய அளவியளார், விரைவு உணவு சேவையாளர் போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சி நெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12/4 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது எமது பிரதேச தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, 021 221 1793, 021 205 7047, 021 226 2550, 071 031 8737, 077 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டும் மேலதிகவிபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அந் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (நி-6)

# கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உசன் பகுதியில் உள்ள மயானம் ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5-30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 419
Viber 076 636 3378


## ராஜபக்ஷக்களின் கைகளில் சிக்கப்போகும்
# தெற்கின் தேர்தல் களம்?

> **முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தலைமையில் புதிய அணி உருவாக வாய்ப்புக்கள் இருப்பதான தகவல்கள் எழுந்துள்ள நிலையில் அது நிச்சயம் ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியை கட்டுப்படுத்தும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.**

**2009** ஆம் ஆண்டு மே மாதம் வன்னிப் பெருநிலப் பரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் உக்கிர மோதல் நடந்து கொண்டிருந்த காலத்தில் அங்கு அதிகம் கொல்லப்பட்டது அப்பாவித் தமிழ் மக்கள். இதை சர்வதேசம் பார்த்துக் கொண்டிருந்தது.

போர் நிறுத்தத்தை அறிவிக்கக் கோரி நாடு கடந்து பல கவனயீர்ப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் போர் நிறுத்தப்படவே இல்லை. அப்பாவிப் பொது மக்கள் அநியாயமாக கொல்லப்படுவதும் நிறுத்தப் படவில்லை.

போரின் இறுதிக் கணங்களில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் செத்து மடிந்து போக பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாய் அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் அறிவிக்கிறார்.

வட பகுதியெங்கும் ஒப்பாரி ஒலி விண்ணைப் பிளக்க தெற்கில் வெற்றி முழக்கம் விண்ணை முட்டியது. முட்கம்பி வேலிக்குள் தமிழ் குழந்தைகள் ஒரு சொட்டு பாலுக்காக ஏங்கித் தவிக்க தெற்கு வீதிகளில் பால்சோறு பொங்கி பகிர்ந்துண்டு வெற்றிக் கொண்டாட்டத்தில் திளைத்தனர்.

அந்தோ; சீனாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாயகம் திரும்புகிறார். விமானத்தில் இருந்து தரையிறங்கியதும் நிலத்தில் வீழ்ந்து மண்டியிட்டு தனது தாய் நாட்டை வணங்கி பயங்கர வாதத்தை வென்றுவிட்டதாய் மார் தட்டிக்கொள்கிறார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதாய் இலங்கை அரசு சர்வதேசத்திற்கு அறிவித்தல் விடுத்திருந்தாலும் அங்கு எத்தனையாயிரம் அப்பாவி உயிர்கள் பறிபோயின என்பதை எண்ணத் தவறிவிட்டது.

பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீருக்குப் பதில் கூற வேண்டியவர்கள் இறந்த அனைவரும் பயங்கரவாதிகளே என்ற ஒற்றை வார்த்தையில் அனைத்தையும் முடித்து வைத்தனர்.

கடிகாரம் ஒரு மாதிரி ஓடும் காலம் அப்படியல்லவே?

காலம் தன் வேலையைக் காட்டத் தொடங்கியது.

நாடே போற்றிய உன்னத தலைவன் மகிந்த ராஜபக்ஷவை அவருடனேயே இருந்த மைத்திரிபால சிறிசேன தோற்கடிக்கிறார்.

தோல்வியின் வேதனை. மகிந்த தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்குச் செல்கிறார். அங்கு கூடிய அவரின் ஆதரவாளர்கள் கண்ணீர் மல்க அவரை வரவேற்றனர்.

மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி தொடரும் வேளை நடைபெற்ற துரோகத்தனம் மீண்டும் ராஜபக்ஷக்களின் கையில் அதிகாரம் வந்து சேர்கிறது.



கோட்டாபயவின் ஆட்சி தொடரும் வேளை நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சிங்கள மக்களை வெகுண்டெழச் செய்தது.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத மக்கள் புரட்சி வெடிக்கிறது. அரசுக்கு எதிராக சிங்கள மக்கள் ஒன்றிணைந்து போராடுகின்றனர்.

மக்கள் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்ணன் மகிந்தவை பதவி விலகச் செய்கிறார். அதற்கும் சிங்கள மக்கள் அடங்காததை உணர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாட்டிற்கு தப்பி ஓடுகிறார்.

யாரை தமது கதாநாய கர்கள் என சிங்கள மக்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினரோ அவர்களை துரத்தியடித்ததை இந்த நாடு மட்டுமல்ல இந்த உலகமே என்றும் மறந்துவிடாது.

நாட்டை இக்கட்டில் இருந்து மீட்க யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று நிலைமையை சுமுகமாக்கினார்.

நாடு பொருளாதார சிக்கலுக்குள் தள்ளப்பட ராஜபக்ஷர்களே காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆயினும் அதை அடியோடு மறுத்த ராஜபக்ஷக்கள் மீண்டும் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவோம் என திடசங்கற்பம் பூண்டுள்ளமை தமிழ் மக்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் விடயமே.

நாடு ஒரு தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகிவிட்டது. இந்த நேரத்தில் ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் முனைப்போடு செயற்படுவது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி சர்வ சாதாரணமான விடயமல்ல.

அரசியலின் அடி ஆழம் வரை சென்று வரக் கூடிய அனுபவசாலியான மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வியூகம் நிச்சயம் வெற்றியைப் பெற்றுத் தரவல்லதாகவே இருக்கும்.

ஏனெனில் தற்போதைய எதிர்க்கட்சி அவ்வளவு பலம் பொருந்திய எதிர்க்கட்சியாய் இல்லை.

ஐ.தே.கவும் அவ்வளவு ப்லம் மிக்க அணியாய் இல்லை.

ஜே.வி.பி சற்று பலம் பொருந்திய அணியாக இருந்தாலும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவிலான நிலையை உருவாக்குமா என்பது கேள்விக்குறியே.

இந்த நேரத்தின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவின் தலைமையில் புதிய அணி ஒன்று உருவாகி வருவதான தகவல்களும் எழுந்துள்ளன.

ஏலவே அசைக்கமுடியாது எனக் கருதிய மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த, நல்லாட்சியின் எழுச்சியில் சந்திரிகாவின் பங்கு மிகப் பெரியது என்பதை மறந்துவிடமுடியாது.

ஆக, மகிந்த ராஜபக்ஷவின் எழுச்சியைக் கட்டுப்படுத்தவல்ல சக்தி சந்திரிகா குமாரதுங்கவிடமே உண்டு என்ற முடிவுக்கு வர முடியும்.

இந்த வேளையில் எமது தமிழ் தலைவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்ற கேள்வியும் எழும்.

இவர்கள் பெரும்பான்மை அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பார்களாக இருந்தால் நிச்சயம் அது அவர்களைத் தோற்கடிக்கும் நிலையிலேயே முடியும்.

அடுத்த ஆண்டு நாடு தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகிவிட்ட நிலையில் தெற்கின் அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறான தாக்கங்களைத் தரப்போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இதே நிலைமை இன்னும் ஒரு சில வருடங்கள் நீடிக்குமாக இருந்தால், எங்கட மண்ணில வாழ முடியாதென்ற நிலைமை வந்து விடும் போல...

**மூப்பர்:-** என்ன விதானையார் சொல்லுறியள். சொல்லுறதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**விதானையார்:-** எங்கட இளம் பிள்ளைகளில் ஒரு பகுதியினர் ஒருத்தரின்ர கட்டுப்பாடும் இல்லாமல் தெருத்தெருவாய்த் திரியினம். அதோட போதைப் பாவனையும் இவர்களிட்ட அதிகரித்திருக்குது.

அதால, இரவு நேரங்களில வீதிகளில போறவர்களை இடைமறித்துக் கத்தியைக் காட்டி வெருட்டி பணம் பறிக்கிற வேலையில ஈடுபடுகினம்.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறது உண்மை தான். இளைஞர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில நிண்டு கொண்டு வீதியால போறவர்களை மறித்து, உங்களிட்ட போதைப் பொருள் இருக்கா எண்டு சோதிக்கப் போறம் எனக் கூறி, அவர்களிட்ட இருக்கிற பணத்தைப் பறித்துக் கொண்டு தப்பிச் சென்று விடுகினம்.

இது தொடர்பில பொலிசாரும் எந்த நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. அதோட, எங்கட ஆட்களும் இப்படியான கள்ளருக்குப் பயந்து ஒதுங்குகினம்.

இதால, சண்டித்தன இளைஞர் குழுக்கள் உருவாகிக் கொண்டு தான் இருக்குது. இப்படியான களவுகளை ஊர்களில செய்ய முடியாது. அப்படி ஆரும் செய்ய வெளிக்கிட்டால், அங்க இருக்கிற இளைஞர்கள் திரண்டு அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவினம்.

ஆனால் இஞ்ச அப்படி எதுவும் செய்யிறதுக்கு ஆட்கள் இல்லை. எங்கட நகர்ப்பகுதிகளில கள்ளன் எண்டு கத்தினால் வீட்டுக் கதவை இறுக்கிச் சாத்துகிற நடைமுறைதான் இருக்குது.

அதனால, கள்வர்கள் கடும் துணிவோட பரவலாகக் கொள்ளையடிக்க வெளிக்கிட்டினம்.

**விதானையார்:-** இதால தான் சொல்லுறன் இதே நிலைமை நீடிக்குமாக இருந்தால், இஞ்ச வாழ முடியாதென்ற முடிவோட எங்கட மண்ணில இருந்து மக்கள் வெளியேறுவினம்.

இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்கப் பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** ஓ! இப்ப எங்கட வடமாகாணத்தில எல்லாம் பிரச்சினை தான்.

**சாத்திரியார்:-** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:-** பொதுவில எங்கட தமிழ்ப் பகுதிகளில அலுவலக முகாமைத்துவம் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் இருக்குது.

பணியாளர்களிட்ட இருந்து எப்படி வினைத்திறனான வேலையைப் பெற்றுக் கொள்வதென்ற முகாமைத்துவ அறிவு போதாமல் இருக்கிறதைக் காண முடியுது.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மைதான். சில மருத்துவ நிபுணர்கள் தங்களுக்குக் கீழ கடமையாற்றுகிறவர்களுக்குக் கடும் ரோச்சர் கொடுக்கினம். இதனால மனப் பாதிப்புக்கு உள்ளான மருத்துவர் ஒருவர் தன்ர உயிரை மாய்க்கிற கட்டத்திற்குப் போனவர் எண்ட தகவல்களும் இருக்குது.

**மூப்பர்:-** இதென்ன நாசமறுப்பு. ஒரு மருத்துவரே தற்கொலை செய்யிற அளவுக்கு மேல்நிலை மருத்துவர்கள் [illegible] மோசமாக நடந்து கொள்ளுகினமோ.

ஓ! இப்ப சமுக வலைத்தளங்கள் எழுதித் தள்ளுகினமல்லோ. அதால சில மருத்துவ நிபுணர்கள் கடும் கோபத்தில இருக்கினமாம். இதால அவையள் தங்கட விடுதி மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களோட சீறிச் சினக்கினம் எண்டு பரவலாகக் கதைபடுகுது.

**வாத்தியார்:-** ஓ! சில மருத்துவ நிபுணர்களுக்குத் தனியார் வைத்தியசாலைகளில கடும் வேலைப் பளு எண்டு கேள்விப் பட்டனான்.

அப்ப அவையள் தங்கட மன அழுத்தத்தைத் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்திட்ட காட்ட முடியாது.

அப்ப எல்லாத்திற்கும் இருக்கிற தர்ம ஆஸ்பத்திரிகளில தானே தங்கட எரிச்சலைக் கொட்டித் தீர்க்க முடியும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் அதுவரை பொறுமையாக இருந்த கங்காணி கார்த்திகேயன்; ஏதோ சங்கதி நடந்திருக்குது. அதைச் சொல்லாமல் சொல்லுகினம் என்பது மட்டும் புரியுது. எல்லாம் காலம் கனிய வெளிவரத் தானே வேணும்.

கங்காணியார் கூறியதோடு ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்க, வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** க.பொ.த சாதாரண தரத்துப் பெறுபேறுகள் வெளிவந்ததைத் தொடர்ந்து மாணவர்கள் உயர்தர வகுப்பில் கற்கத் தொடங்கியிருக்கினம்.

ஆனால் எங்கட வடக்கில தமிழ் மாணவர்களில் அதிகமானவர்கள் விஞ்ஞானம், கணித பிரிவில தான் சேருகினம் எண்டு சொல்லப்படுகுது.

இதால ஆட்ஸ், கொமர்ஸ் படிக்கிற பிள்ளைகளின்ர எண்ணிக்கை கணிசமாகக் குறைவடைந்து போகுதாம்.

அதிலும் தமிழ், இந்து நாகரிகம், இந்து சமயம் போன்ற பாடங்களைப் படிக்கிறதில மாணவர்கள் துண்டாக் கரிசனை காட்டுகினம் இல்லை எண்டும் சொல்லப்படுகுது.


**பண்டிதர்:-** அடக் கடவுளே! அப்ப எங்கட தமிழ்மொழியும் எங்கட இந்து சமயமும் உயர்தரத்தில கற்கப்படாமல் விட்டால், எதிர்காலம் எப்படியாகப் போகப் போகுது.

**விதானையார்:-** உயர்தரத்தில மாணவர்கள் பாடத் தெரிவைச் செய்வதற்கு அவர்களுக்குச் சரியான வழிகாட்டலும் வழிப்படுத்தலும் தேவை.

இல்லையெண்டால், விஞ்ஞானம், கணிதம் எண்டு எல்லாரும் எடுத்து கவுண்டு விழுகிறதாகத்தான் நிலைமை முடியும்.

**வாத்தியார்:-** அப்ப உயர்தரத்தில பாடத் தெரிவு தொடர்பில, எங்கட பல்கலைக்கழகம் வழிப்படுத்தல் கருத்தரங்குகளைச் செய்ய வேணும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில எடுப்பம் எனக் கூற, அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



**மேல் நிலை அதிகாரிகளின் கடும் ரோச்சர் காரணமாக...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதி ரணிலின் ஆட்சி தொடர்ந்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுந்து வருவார்கள் என்ற ஜீ.எல் பீரிசின் கூற்றுப் பற்றி?

**திகான் வடமராட்சி**

**ஒரு இனம் தனது உணவுத் தேவைக்காக சுய உற்பத்தி செய்வது ஆரோக்கியமானது தானே?**

உண்மைதான்.அது இலங்கையில் தற்போது சாத்தியமானது போல தெரியவில்லையே.

முட்டை இறக்குமதி, அரிசி இறக்குமதி இப்படி குண்டூசியில் இருந்து குண்டு மணிவரை இறக்குமதி செய்தால் சுய உற்பத்தி எப்படி பெருகும்.

அதுவும் சீன இறக்குமதிப் பொருட்களால் சீரழிந்து கொண்டிருக்கிறது நாடு. ஆமையைப் பிடிப்பார் மல்லத்துவர். யாமது சொன்னால் பாவம் என்ற நிலையே வியாசரின் நிலையும்.

**ஆர்த்திகன் யாழ்ப்பாணம்**

**நட்பு என்பது என்ன வியாசரே?**

அப்போது எனக்கு வயது 15. பாடசாலை விட்டு வீடு செல்லும் போது ஒரு வளவில் கொய்யாமரம். நிறையப் பழங்கள், நான், நண்பன் உட்பட 10 மாணவர்கள் வேலி புகுந்து கொய்யாப்பழம் பிடிங்கிக் கொண்டிருந்தோம்.

நான் மரத்தில் நண்பன் கீழே திடீரென வீட்டுக்காரர் வந்துவிட்டார்.

அனைவரும் பாய்ந்து விழுந்து ஓடி விட்டார்கள். நான் பயப் பீதியுடன் மரத்திலிருந்து இறங்கினேன். மரத்தடியில் நண்பன் விறைப்பாய் நிண்டு கொண்டிருந் தான். வீட்டுக்காரர் கேட்டார். நீ ஏன் ஓடவில்லை என. அவன் கூறினான். மரத்தில் இருப்பது எனது நண்பன் அவனை விட்டுவிட்டு நான் எப்படி ஓடுவது என்று.

பாராட்டிய வீட்டுக்காரர் திருடுவது தவறு. அனுமதி பெற்று பிடுங்கி உண்ணலாம் என்று பழம் தந்து அனுப்பி வைத்தார். 60 கடந்து இன்னும் அந்த நட்பு தொடர்கிறது.

**சுந்தரகுமார் கொக்குவில்**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கலாம் என்று நினைக்கிறீர்கள் வியாசர் சித்தப்பா?**

கொழுக்கட்டைக்கும் மோதகத்துக்கும் அல்லாமல் எமது தனித்துவத்துக்காய் வாக்களிக்கலாம் என்பது எமது முடிவு. புரியவில்லையா? தமிழர் ஒற்றுமையை பறை சாற்ற தமிழர் பகுதியில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு வாக்களித்து எமது பலத்தையும் எதிர்ப்பையும் பேரினவாதத்துக்குக் காட்டினால் நிலை எப்படி இருக்கும்?

கொழுக்கட்டை அல்லது மோதகத்துக்கு வாக்களித்தால் அதனால் தமிழினத்துக்கு எந்த விமோசனமும் கிடைக்கப்போவதில்லை. இதுவே இந்த வியாசரின் முடிவு.



# வியாசர் பதில்கள்

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**டனுசாந்த- ராசா திருநெல்வேலி**

**பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர் மத்தியில் மட்டும் தலை தூக்குகின்றதே அது ஏன்?**

ஏனென்றால் அது முற்று முழுதாக தமிழினத்தை அடக்குவதற்காக உருவாக்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் வீரியம் என்னவென்று கோட்டா கோகம போராட்டத்தின் பின்னரே சிங்கள மக்கள் புரிந்து கொண்டனர்.

அதன் பின்னர் அதை வெகுவாக எதிர்க்கவும் செய்தனர். தற்போது அதை ஒழிக்கும் கதையை மீண்டும் மறந்துவிட்டனர்.

ஆனால் பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் மீது பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**அஜீபன் கிளிநொச்சி**

**இலங்கை தமிழர்களுக்கானதா? சிங்களவர்களுக்கானதா வியாசரே?**

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் என பல ஆதாரங்கள் இருக்கின்றன. ஆயினும் அதை பெரும்பாண்மையினர் ஏற்பதாய் இல்லை.

சிங்களவர்களும் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளே என்பதை தமிழினம் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஏனோ தமிழ் மக்களின் மனநிலை சிங்கள மக்களுக்கு வரவில்லை என்பது தான் வேதனை.

தனிநாடு கேட்டு தமிழினம் பட்ட துன்பம் போதாதா தம்பி?




பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர் மத்தியில் மட்டும் தலை தூக்குகின்றதே அது ஏன்?

**கிருஜா நெல்லியடி**

**ஒருதலைக் காதல். அதனால் வரும் இருதலை மோதல் பற்றி விளக்க முடியுமா வியாசரே?**

காதலையே கறுமம் என்று கூறும் இந்த வியாசரிடம் ஒரு தலைக் காதல் பற்றிக் கேட்டால் எதைச் சொல்ல.

ஒருதலைக் காதல் என்பது கடையின் சோக்கேசில் இருக்கும் வாய்ப்பன் போல. அதில் இருப்பதில் பெரிய வாய்ப்பன் எனக்கு வரும் என்று காத்திருக்கும் தருணத்தில் அருகில் இருந்தவன் அதை எடுத்து கடித்து ருசிக்கத் தொடங்கி விடுவான்.

இந்தக் கறுமமெல்லாம் நமக்குத் தேவையா என்ன?

**சுதன் குப்பிழான்**

**கோத்தாவைச் சந்திக்க மறுத்த உலகத் தமிழ் பேரவை மகிந்தவை சந்தித்தது ஏன்?**

"ஆடு பகை குட்டி உறவு " என்றொரு பழமொழியுண்டல்லவா. அதுபோலத் தான். இதுவும்.

நாம் ஒரு விடயத்தை எதிர்க்கிறோம் என்றால் அதில் உறுதியாக இருக்க வேண்டும்.

இல்லையேல் எதிர்க்காமல் இருப்பதே சிறப்பு.இந்தச் சிறப்பு ஏனோ அவர்களுக்குத் தெரியவில்லை.

**கணேஸ் பருத்தித்துறை**

**ஜனாதிபதி ரணிலின் ஆட்சி தொடர்ந்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் எழுந்து வருவார்கள் என்ற ஜீ.எல் பீரிசின் கூற்றுப் பற்றி?**

ஆட்சியாளர்களுக்கு புலிப் பூச்சாண்டி காட்டுவது வாடிக்கையாகி விட்டது. அவர்களுக்கு புலிகள் பற்றிக் கதைக்காமல் விட்டால் தூக்கமே வராது போல.

புலி வருகிறது என்று கூறிக் கூறி தமது அரசியல் பலத்தை பன்மடங்காக்கி விடுவார்கள்.

இதில் பெரிதும் பாதிக்கப்படுவது தமிழ் மக்கள் தான்.

சிங்கள தலைவர்கள் அநியாயத்துக்கு பொய் கூற அதை அப்படியே நம்பி அவர்களுக்கு வாக்களிக்கும் சிங்கள மக்கள் இப்போதும் இருக்கிறார்கள் என நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஆடிப்பெருக்கு
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: ஜி. ராமநாதன்
பாடியவர்: பி. லீலா



பொருளோடு வாழ்வு உருவாகும் போது
புகழ் பாடப் பலர் கூடுவார் - அந்தப்
புகழ் போதையாலே எளியோரின்
வாழ்வை
மதியாமல் உரையாடுவார் - ஏழை
விதியோடு விளையாடுவார்

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா? – அந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை சேர்க்கவா
காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

பொருளோடு வாழ்வு உருவாகும் போது
புகழ் பாடப் பலர் கூடுவார் – அந்தப்
புகழ் போதையாலே எளியோரின் வாழ்வை
மதியாமல் உரையாடுவார் – ஏழை
விதியோடு விளையாடுவார் – அன்பை
மலிவாக எடை போடுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்

அழியாது காதல் நிலையானதென்று
அழகான கவிபாடுவார் – வாழ்வில்
வளமான மங்கை பொருளோடு வந்தால்
மனம் மாறி உறவாடுவார்
கொஞ்சு மொழி பேசி வலைவீசுவார் – தன்னை
எளிதாக விலை பேசுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்


# மழை, குளிர்காலங்களில் பசி உணர்வு குறையுமா?

உண்மையில் மழை மற்றும் குளிர்காலங்களில் பசி உணர்வு வழக்கத்தைவிட சற்று கூடும். பெரிதாக வேலை செய்யாமல் வீட்டில் உட்கார்ந்திருப்போம். வேலைக்குச் சென்றாலும் வெளியே சுத்தாமல் நேரே வீட்டுக்கு வர நினைப்பார்கள் பலரும்.

வாக்கிங் உள்ளிட்ட உடற்பயிற்சிகள் குறையும். சும்மா இருக்கும் நேரம் அதிகரிக்கும். அந்த நேரத்தில் டிவி பார்க்கத் தோன்றும். டிவி பார்த்தபடியே நொறுக்குத்தீனிகள் சாப்பிடத் தோன்றும். நொறுக்குத் தீனிகள் என்றாலே நம்மூரில் பொரித்தவை, வறுத்தவைதான் என்றாகிவிட்டது. அப்படி கண்டநேரத்தில் ஆரோக்கியமற்ற நொறுக்குத்தீனிகள் சாப்பிடுவதால் வயிறு நிறைந்து, சாப்பாட்டு நேரத்தில் உணவு சாப்பிட முடியாமல் போகலாம்.

எனவே, மழை நாட்களில் பசி உணர்வு அதிகரிக்கும் என்பதுதான் உண்மை. பெரும்பாலும் அந்த நாட்களில் நாம் 2 முதல் 3 கிலோ வரை எடை அதிகரிப்போம். அதுவே வெயில் நாட்களில் அந்த எடை குறைந்துவிடும். உங்கள் விடயத்தில் குறைவாகச் சாப்பிட என்ன காரணம் என்று கண்டறிய வேண்டும். காய்கறிகள், பழங்களை சற்று அதிகமாக எடுத்துக் கொள்ளலாம்.

வாக்கிங்கூட செய்யாமல், உடற்பயிற்சி செய்யாமல் இருப்பதால் சிலருக்கு மலச் சிக்கல் பிரச்சினை இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினை உள்ளவர்கள், வீட்டுக்குள்ளேயே



தினமும் சிறிது நேரம் நடக்கலாம். முக்கியமாக உடலியக்கம் இருக்கும்படியான சின்னச் சின்ன வேலைகளைச் செய்வதால் பசி உணர்வு கூடும்.

உணவில் காய்கறிகள், பழங்கள் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். உடற்பயிற்சி, யோகா போன்றவை அவசியம்.

வயிற்றில் கிருமிகள் இருந்தாலும் சிலருக்குப் பசி உணர்வு இருக்காது. மருத்துவரை அணுகி பூச்சி மருந்து தேவையா எனக் கேட்டு எடுத்துக்கொள்வதும் உதவும்.



"உங்க வீட்டுல திருட வந்தவன் ஒரு பிச்சைக்காரனாத்தான் இருப்பான்னு சொல்றியே, எப்படி?"
"பீரோ சாவியை எடுங்க தாயின்னு பணிவா கேட்டானே!"



"அதென்ன அமைச்சரே, ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் செய்த போர்க்கொடி?"
"அதாவது மன்னா, போர்க்களத்தில் நிலைமை கை மீறிப் போகும்போது நம் நாட்டுக்கொடி தானாகவே வெள்ளைக்கொடியாக மாறிவிடுமாம்!"



"எதிரியின் கொடியைவிட நம் கொடிதான் உயரத்தில் பறக்க வேண்டும் அமைச்சரே..."
"சமாதானக் கொடிக்கு ஏன் மன்னா இவ்வளவு பில்டப்!"



"என்ன இது, பதுங்குகுழி உள்ளே ஒரே தண்ணீராக இருக்கிறது அமைச்சரே..?"
"ஓடிவந்த அவசரத்தில் தாங்கள் கிணற்றுக்குள் இறங்கிவிட்டீர்கள் மன்னா..!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசா போர் தொடரும் இஸ்ரேல் அதிரடி

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் குழு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் தொடங்கியது. இதில் இஸ்ரேல் குடிமக்கள் 1,200 பேரும் பாலஸ்தீன குடிமக்கள் 18,500இற்கும் மேற்பட்டவர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில், ஐ.நா சபையில் 153 நாடுகளின் ஆதரவுடன் போர் நிறுத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், இதை ஏற்றுக்கொள்ளாத இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதலை நடத்தியது. இதற்கிடையில், நான்கு நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் அழைப்பு விடுத்தது. அதனடிப்படையில், ஹமாஸ் குழு கைது செய்து வைத்திருந்த இஸ்ரேல் பணயக் கைதிகளையும் இஸ்ரேல், பாலஸ்தீன கைதிகளையும் பரஸ்பரமாக விடுவித்தன. ஆனால் இன்றளவும் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

இந்தப் போரின் ஆரம்பத்தில் "இஸ்ரேலை உலகின் பெரும் பகுதி ஆதரித்து வருகிறது" எனப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஒருகட்டத்தில், "இஸ்ரேல் நடத்தும் கண்மூடித்தனமான குண்டு வெடிப்பால், தாக்குதலால் உலகின் ஆதரவை இழக்கத் தொடங்குகிறது" எனக் கண்டனம் தெரிவித்தார். போர் நிறுத்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் கூட்டறிக்கையிலும் "காசாவில் குடிமக்களுக்கான பாதுகாப்பான இடம் குறைந்து வருவதைக் கண்டு பீதியடைந்திருக்கிறோம்" என எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன.

கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். ஐ.நாவின் தகவலின்படி, பாலஸ்தீனத்தின் 2.4 மில்லியன் மக்களில் 1.9 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். பாதுகாப்பற்ற இடங்களில் பிளாஸ்டிக் கவர்களால் கூடாரங்களை அமைத்துத் தங்கி வருகிறார்கள். நாளொன்றுக்கு சுமார் 100 உதவி வாகனங்களிலிருந்து மட்டுமே அவர்களுக்கான அடிப்படைத் தேவைக்கானப் பொருட்களைப் பெறுகிறார்கள்.

காசாவில் 60 சதவிகித தகவல் தொடர்பு உட்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. சாலைகள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு இணையில்லாத சேதத்தை இஸ்ரேல் ஏற்படுத்தியிருக்கிறது" எனக் குறிப்பிட்டிருக்கிறது.

மத்திய காசாவிலுள்ள அல்-அக்ஸா தியாகிகள் மருத்துவமனையின் மைதானத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் முகாமிட்டிருக்கிறார்கள். கடும்குளிரிலும் மழையிலும் குழந்தைகளுடனும் போரால் ஏற்பட்ட காயங்களுடனும் போதிய மருத்துவ சிகிச்சையோ, மருந்தோ, உணவோ, தண்ணீரோ இல்லாமல் தவித்து வருகிறார்கள். குழந்தைகளுக்கான தடுப்பூசிகளும் தீர்ந்து விட்டதாக காசா சுகாதாரத்துறை தெரிவித்திருக்கிறது.

### வடக்கிலிருந்து தெற்கு காசா நோக்கிப் பயணப்படும் பாலஸ்தீனர்கள்

தொடர்ந்து ஒலிக்கும் சைரன் சப்தத்தால் பதற்றத்துடன் நாட்களை நகர்த்துகிறார்கள். இதைத் தொடர்ந்து, உலக வங்கி நடத்திய ஆய்வில், "காசாவில் உயிரிழப்புகளின் எண்ணிக்கையின் வேகமும் சேதங்களின் அளவும் தொடர்ந்து இணையற்ற அளவில் அதிகரித்து வருகின்றன" என எச்சரித்திருக்கிறது.

ஐ.நாவின் செயற்கைக்கோள் பகுப்பாய்வு நிறுவனமான UNOSAT, "காசாவின் உட்கட்டமைப்பில் 18 சதவிகிதம் அழிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுப்பாய்வு இரண்டு வாரங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட விண்வெளிப் புகைப்படத்தை அடிப்படையாகக் கொண்டது" எனக் குறிப்பிட்டும் எச்சரித்திருக்கிறது.

இந்த நிலையில், இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சர் எலி கோஹன் (Eli Cohen), "எங்களின் முக்கியக் கூட்டாளிகள் எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் சர்வதேச ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஹமாஸ்"க்கு எதிரான போரை இஸ்ரேல் தொடரும். தற்போதைய நிலையில் போர் நிறுத்தம் என்பது பயங்கரவாத அமைப்பான ஹமாஸ்"க்கு ஒரு பரிசாகும். அதனால் அது திரும்பவும் இஸ்ரேலில் வசிப்பவர்களை அச்சுறுத்த வாய்ப்பிருக்கிறது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.





# ஹமாஸின் வெறித்தனம்

இஸ்ரேல் - ஹமாஸ் குழுவுக்கு மத்தியில் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தொடங்கிய போர் இன்னும் நீடிக்கிறது. இந்தச் சூழலில், தற்போது, ஹமாஸின் தாக்குதலின் போது தாக்குதலுக்குள்ளாகப்பட்ட இராணுவ வீராங்கனை பகிர்ந்திருக்கும் செய்தி, சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பகிரப்பட்டு வருகிறது. அவரது பதிவில், "முதல்நாள் இரவு இசை விழா முடிந்து ஒக்டோபர் 7 ஆம் திகதி வழக்கம் போல் அமைதியாகவே எங்கள் நாள் தொடங்கியது.

நாங்கள் 13 பேர் பாதுகாப்புப் பணியிலிருந்தோம். திடீரென சைரன் சப்தம். அது என்னவாக இருக்கும் எனக் கணிப்பதற்குள் தொடர்ந்து துப்பாக்கி சுடும் சத்தம். எங்களை நோக்கி ஹமாஸ் குழு வந்து கொண்டிருக்கிறது. ஆயுதங்கள் ஏதும் இல்லாததால் நாங்கள் பாதுகாப்பு அறையை நோக்கி ஓடத் தொடங்கினோம். அப்போது எனது காலில் ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. தடுமாறி விழுந்த நான், சமாளித்துக்கொண்டு எழுந்து ஓட முயன்றேன்.

அதற்குள், என்னுடன் பணி செய்யும் சக வீரர்கள், பாதுகாப்பு அறைக் கதவைப் பூட்டிக்கொண்டார்கள். நான் எவ்வளவு தட்டியும் அவர்கள் திறக்கவில்லை. நான் அங்கிருந்து நகர்ந்து பின் வாசல் கதவைத் தட்டினேன், சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. உள்ளே விழுந்து, மேசைக்குக் கீழே ஒருவர் மீது ஒருவராகப் பதுங்கிக் கொண்டோம். எனது துப்பாக்கிக் குண்டு காயத்துக்கு, சக பணியாளர் ஒருவர் துணி ஒன்றைக் கொடுத்துக் கட்டிக்கொள்ளக் கூறினார். ஆனால், அதற்குள் எங்கள் அறைக்கதவு உடைக்கப்படும் சத்தம் கேட்டது.

மிகுந்த பதற்றத்துடன், அவ்வளவுதான் எங்கள் வாழ்க்கை முடிந்தது என மனதால் எனது அன்புக்குரியவர்களை நினைத்துக் கொண்டிருந்தேன். கதவு உடைக்கப்பட்டது. உள்ளே வந்த சில ஹமாஸ் குழுவினர், எங்களை நோக்கி சரமாரியாகச் சுட்டார்கள். என்னுடைய உடலில் மொத்தம் 12 தோட்டாக்கள். இறந்த சடலங்களுக்கு மத்தியில் நானும் சடலம் போலக் கிடந்தேன். என் இறுதி குண்டுக்காக காத்துக்கொண்டிருந்தேன். ஹமாஸ் போராளிகள், நாங்கள் இறந்துவிட்டோமா எனச் சோதித்துவிட்டு, எங்கள் அறையிலிருந்த கோப்புகளைச் சோதனை செய்துவிட்டுப் புறப்பட்டார்கள்.

நான் கொஞ்சம் கொஞ்சமாக இறந்துகொண்டிருந்தேன். சில நிமிடங்களில், என் தோழி சஹா மூச்சு விடுவதை அறிந்தேன். என்னால், பார்க்க முடிந்தது, கேட்க முடிந்தது அவ்வளவுதான். ஆனால், என் தோழி நானும் உயிருடன் இருப்பதை அறிந்து, அவளது சட்டையைக் கழற்றி என் உடலிலிருந்து வெளியேறும் ரத்தத்தை நிறுத்தக் கொடுத்தாள். என் உடலில் எந்த இடங்களிலெல்லாம் காயம் இருக்கிறது என்பதை அறிவதற்குள் நான் இறந்துவிட்டேன் என்றே நினைத்தேன். சுமார் 4 மணி நேரத்துக்குப் பிறகு மீட்புக்குழு வடிவில் தேவதைகள் வந்தார்கள். அப்போதே அவர்களிடம் என் குடும்பத்தாருக்கு என் நிலையைத் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டேன்.

அதன் பிறகு நான் கண் விழித்துப் பார்த்தபோது, மருத்துவமனையிலிருந்தேன். 2 அறுவை சிகிச்சைகள் முடிந்திருக்கிறது. மருத்துவமனையில் முதல் 48 மணிநேரம் கடினமானதாக இருந்தது. அடுத்த மூன்று நாட்களுக்கு மருத்துவர்கள் என்னை மயக்க நிலையில் வைத்திருந்தனர். என்னுடன் உயிர்பிழைத்த தோழியும் குணமடைந்து வருகிறார். இவ்வளவுக்கு பிறகும் நான் உயிர் பிழைத்திருப்பது அதிசயம்தான். இந்த சம்பவம் என் வாழ்வில் திகில் நிறைந்த திரைப்படத்தைப் போன்றது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணியவில்லை ஏன்?

மனிதனாக வாழ்வதற்கு
நூல்கள் பல உண்டே - இருந்தும்
மனித வாழ்வை விடுத்து வாழும்
இழிவு தேவையா?
அழுவதற்கும் தொழுவதற்கும்
மனிதம் தேவையா?
தொழுது வாழும் வாழ்வு என்றும்
மதத்தைச் சாருமோ?

மதங்கள் நூறு வந்து மென்ன
மனிதம் நோகுதே-என்றும்
இனிமை காட்டும் மதத்தை யாரும்
காண்பதில்லையோ- புவியில்
துயர வாழ்வு மனித வாழ்வின்
தோல்வி ஆகுமா?
அமர வாழ்வு வாழ
மனிதம் துணிந்து நிற்குமா?

மனித வாழ்வு வாழ்வதற்கு
மார்க்கம் வேண்டுமா- மண்ணில்
இனிமை காண எண்ணி
வாழ்வை வகுத்துக் கொள்ளவா?
மனித வாழ்வு அருமை என்று
கவலும் மனிதனே நீ
மனிதனாக வாழ இன்னும்
துணியவில்லை ஏன்?



வளவைவளவன்.

## தொடர்பு எல்லைகளுக்கு அப்பால்...



ஒரு நாளின்
ஒரு. பொழுதில்
தொடர்பு எல்லைகளுக்கு அப்பால்
நம்மை தூக்கியெறியப்போகிறது
இந்த உயிர்...

மறுகணமே
உடலை உதறிவிட்டு
கூடு தாவும்·அதன் சிறகுகள்
இன்னொரு கூட்டில்
சோம்பல் முறித்துக் கொள்ளப்போகிறது...

ஒட்டிக்கொண்டே இருந்து விட்டு
உரித்தெறியப்படும் பாம்புச் சட்டையாய்
வீசப்பட்ட பின்னர்
அந்நியப்பட்டும் நிற்கும்
இந்த உலகில்
வாழ்வு எல்லோருக்குள்ளும்
எப்படி எப்படியெல்லாமோ புகுந்து
வாழ்ந்து விடுகிறது

சங்கரி சிவகணேசன்.

## பெண்ணே விழித்தெழு

பெண் பெரும் பேறு பெற்றவள்
வல்லமைகள் உள்ளவள்
சக்தி படைத்தவள் என்பதால் தான்
சமயங்களிலும் பெண்மைக்கு
முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது
புதுமைக் கவி பாரதி கூட
சாதம் படைக்கவும் செய்திடுவோம்
தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்
என்று பெண்ணை பெருமைப்படுத்தியுள்ளார்
ஆயினும் பெண் தன்னைத் தானே
மலினப்படுத்தி கொள்கிறாள்
அங்கம் தெரிய ஆடையணிந்து
அநாகரிகமாகத் தன்னை
காட்சிப் பொருளாக்குகிறாள்
நிலை இது தானென்றிருக்கையில்
பெண் விடுதலையென்பது
இல்லையென்பதும்
உண்மையாகின்றது-ஆதலால்
தன்னை தயார்ப்படுத்தி
பெண் விடுதலை தொடர்பில்
தேடல் செய்து தெளிவடைந்து
தன்னை உணர்ந்து
செயற்படுமிடத்தே தான்
பெண் விடுதலையென்பது
உண்மையான அர்த்தமுள்ள
வாழ்வு வாழலாம்



சி.இ.அன்புதுரை, மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 694




## துடிப்பில்லாத படகு

பால் மணம் மாறாத பாலகனிவன்
பால்குடித்து தாலாட்டு
பாடி தூங்கும் வயதில்
தாயன்பை தந்தையின்
அணைப்பில் உணர்கின்றதே
தாய்க்குப் பின்
தாரமென்றனர் சான்றோர்
தாரக மந்திரத்தை
உணர்ந்திட்ட இவன்...!

ஆ.செல்வி,திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 695




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## அரவணைப்பின் ஆழ்கடல்

ஆழ்கடல் அலைகள்
தான் ஓய்வதுண்டோ
அன்புக் கடல்தான் வற்றுவதுண்டோ
அழகான தருணங்களை
நெஞ்சம் மறந்திடுமோ
அன்னையின் மடியில்
மட்டுமா அன்பான உறக்கமோ
இல்லை தந்தையின்
மார்பிலும் கிடைத்திடுமே
சிந்துகின்ற கண்ணீரும்
தித்திப்பாகும்-தந்தையே
உன் அன்பான அரவணைப்பிலே
அன்புக்கடல் ஆழத்தைக்
கண்டவருண்டோ?

ஆ.லக்ஷ்மி,
வவுனியா.

## நான் அறியேன்

பெற்றால்தான் பிள்ளையா?
என்னவள் பெறாமலே
உன்னை எனக்குத் தந்தாள்
உன் தாய் கவர்ச்சிக் கன்னி
திரையுலக நாயகி
வாடகைத்தாயை
நான் அறியேன்.

பிரமன், கொக்குவில்.

## கனவும் நினைவும்

மார்பில் அணிவதற்கு
உன்னைப் போல் வைர மணிகளுண்டோ
சீர்பெற வாழ்வதற்கு
உன்னைப் போல் செல்வம் பிறிதுண்டோ?
பாரதியின் கனவு எனக்கு நினைவானது

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

## அன்பின் பிணைப்பு

தன்னலம் விடுத்து என்நலம் காக்க
அவதரித்த அற்புத ஆணிமுத்து நீயல்லவா!
நெஞ்சோரம் தனிலே தலைசாய்த்து
தாய்க்கு நிகராய் தாலாட்டு
பாடிடும் தாயும் நீயல்லவா!
உன் தூக்கம் கெடுத்து என்னை
கண்ணுக்குள் மணியாய்
காத்திடும் காவற்காறன் நீயல்லவா!

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## சிறந்த தந்தை

வட்டியிலும் தொட்டிலிலும்
மார்மேலும் தோள் மேலும்
சீராட்டி பாராட்டி
நற்பண்புகளுடனான
கல்வி அறிவூட்டி
தன் மகன் ஓர் நற்பிரஜையாக
வாழ நல்வழி காட்டுதலே
சிறந்ததோர் தந்தையின் கடமை

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## தாயுமாய்

மடி சுமந்தவள் வாஞ்சையோடு
வாரி மார் முலையூட்டும்
பரிவு கிட்டாதெனில்
தந்தை மார்பே!
தஞ்சமென தலைசாய்க்கும்
மகவுக்கு தன் நெஞ்சை
மஞ்சமாக்கி அன்பூட்டி
சீராட்டி வழிநடத்தும்
தந்தையர் தெய்வங்கள்

சி.இ.அன்புதுரை,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




காலத்தின் பதிவு 88

நிறுத்திய அதே நேரத்தில் பெரும் இன்ப வலை அந்த இருவரையும் சூழ்ந்துகொண்டது. "சுதந்திரத்தை இழப்பதில் சக்தி ஏற்படுகிறதா?" என்று மெள்ள வினவினான் அவன்.

"ஆம்!" "சுதந்திரமே சக்தியல்லவா?" "நாட்டுக்கு அது சக்தி, ஆடவர்களுக்கும் அதுதான் சக்தி." பெண்களுக்கு?"

"சுதந்திரத்தில் சக்தியில்லை. சுதந்திரத்துடன் உலாவும் பெண்களை ஆடவர் வேடிக்கை பார்ப்பார்கள். அழகை ரசிப்பார்கள். அடையப் பிரியப்படவும் செய்வார்கள். ஆனால் மதிக்கமாட்டார்கள்."

"சுதந்திரமிழந்தால்?" "சக்தி அதிகம்." "எப்படி?" "அகூதாவுடன் உங்களுக்கு நெருங்கிய பழக்கந்தானே?" "ஆமாம்." "சீனத்துக்குப் போயிருக்கிறீர்களா?" "போயிருக்கிறேன்."

"அங்கு வாணம் விட மருந்து தயார் செய்கிறார்கள்." "தெரியும் எனக்கு." "அந்த மருந்து சுதந்திரமாக உதிர்க்கப்படும் போது தீப்பட்டால் பரவலாகத்தான் எரியும்."

"ஆமாம்."

"அதைச் சீனத்துக் களிமண் செப்பில் அடைத்து வைக்கிறார்கள். அந்தச் செப்பில் தீயை வைத்துப் பாருங்கள். சீறி வெளிவந்து பெரும் தீப்பொறிகளைப் பயங்கரமாகக் கக்கும். வீட்டிலடைக்கப்படும் பெண்ணும் அப்படித்தான். அடைத்தவுடன் அவள் சக்தி அபரிமிதமாகிறது. சுதந்திரமிழந்த மருந்து போல்தான் அவள் சக்தி. அந்தச் சக்திக்கு ஆடவன் அஞ்சுகிறான்."

அடக்கத்தின் சக்தியை விவரித்த மஞ்சளழகி முகத்தில் அந்தத் தருணத்தில் பெரும் பொலிவு ஏற்பட்டதை இளையபல்லவன் கவனித்தான். இத்தகைய அழகும், ஆசையும் பெண்களுக்கு இருக்கும்வரை உலகத்துக்குக் குறைவில்லையென்று நினைத்த இளையபல்லவனை நோக்கி மேலும் சொன்னாள் மஞ்சளழகி. "அதனால்தான் உங்கள் கடுமையை நான் ரசித்தேன். உங்கள் அதட்டலை நான் விரும்பினேன். ஓர் ஆடவன் ஒரு பெண்ணை அதட்டுவதில் அர்த்தமிருக்கிறது.

"என்ன அர்த்தம்?" ஏதும் புரியாமல் வினவினான் இளையபல்லவன்.

"யார் அதட்ட முடியும்?" என்று பதிலுக்குக் கேட்டாள் மஞ்சளழகி. "நீதான் சொல்." "சொந்தக்காரன்தான் அதட்ட முடியும்."

"ஓகோ!"

"ஆம் சொந்தமிருப்பவன் அதட்டுகிறான். தான் அவனுக்குச் சொந்தம் என்பதை உணர்த்தும் சொற்களின் கடுமை பெண்களுக்குத் தரும் இன்பம் சொல்லி முடியாதது இளையபல்லவரே!" என்ற மஞ்சளழகி புன்னகை பூத்தாள். அத்துடன்வேறொரு கேள்வியும்கேட்டாள். "சுதந்திரத்தை இழப்பதில் எத்தனை இன்பமிருக்கிறது இளையபல்லவரே! இப்பொழுது புரிகிறாஎன்நிலை உங்களுக்கு?" என்று.

அவள் நிலை படைத்தலைவனுக்குச் சந்தேகமறப் புரிந்துவிட்டது. தன் அதட்டலையும் கடுமையையும் தான் ஆள்வதையும் அவள் பெரிதும் விருப்புகிறாளென்பதை இளையபல்லவன் மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டான். அப்படி ஏற்பட்ட பராதீனமான நிலையை நினைத்தே அவள் ஆரம்பத்தில் நகைத்தாள் என்பதும் புரிந்தது அந்த வாலிபனுக்கு. அவள் நிலையை அறிந்த அவன், அவள் உணர்ச்சிகளின் பெருக்கைப் புரிந்துகொண்ட அவன், அவள் செய்ய

## விளங்கிய சம்பத்து

உத்தேசிக்கம் தியாகத்தின் எல்லையைப் புரிந்துகொண்ட அவன், என்ன செய்வதென்று தெரியாமல் திணறினான்.


முகத்துக்கருகில் முகமும், கண்களுக்கருகில் கண்களும் உதடுகளை எதிர்நோக்கி உதடுகளும் இருந்த அந்த நிலையில் எதிரேயிருந்த புஷ்பங்களைப் பறித்துக் கொள்ள உணர்ச்சி தூண்டியது. அப்படிப் பறிக்க இஷ்டப்பட்டால் தடையில்லாதது மட்டுமல்ல, அந்தப் புஷ்பம் அதை எதிர்பார்க்கவம் செய்கிறது என்பதையும் புத்தி குறிப்பிட்டது. "கிடைக்கிறது என்பதற்காக எதையும் பறித்தக் கொள்வது கயவன் செயல். அதில் நீ ஈடுபடாதே இவளுடன் நீ இங்கேயே வாழ முடியுமானால் இஷ்டத்துக்கு இணங்கு. இல்லையேல் நாணயமாக விலகிவிடு. எதற்கும் அவள் இந்த நாட்டுப் பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டாளே அது என்னவென்றும் கேட்டுப் பார், என்று பண்பட்ட அவன் இதயம் மட்டும் வலியுறுத்தியது.

ஆகவே உணர்ச்சிகள் உரிமை கொண்டாடத் தூண்டிய அந்த நிலையிலும் அவன் மெள்ளத் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு கேட்டான். "ஆம் மஞ்சளழகி, உன் நிலை அப்படி, என் நிலையையும் நாட்டுப் பழக்கத்தையும் பற்றி ஏதோ குறிப்பிட்டாயே அது என்ன?'

காதல் விரிந்து கிடந்த அந்த கமலச் செவ்வரிக் கண்களில் அனுதாபத்தின் சாயை மெல்லப் படர்ந்து சென்றது ஒரு விநாடி. அந்த விநாடியில் அவள் உதடுகளிலிருந்தும் சோகம்ததும்பும் சொற்கள் உதிர்ந்தன. அக்ஷயமுனை சொர்ண பூமியின் ஒரு பகுதிதான் என்றாலும் இங்குள்ள பழக்கங்கள் சில, நாட்டின் இந்தப் பகுதிக்குத் தனிப்பட்டவை..." என்ற தயக்கத்துடன் சொன்னாள். (தொடரும்)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 34

## பாரதியின் பின்புலங்கள்



பாரதி, தான் வாழ்ந்த காலத்து அரசியல் சமூக வாழ்க்கையோடு தன்னைப் பெரிதும் பின்னிப் பிணைத்துக் கொண்டவன்.

பாரதியின் அரசியற் சார்பு அவனது பக்திமனத்தை வளரக்கத்தக்க வாய்ப்புகளையே வழங்கி வந்தது.

1906இல் கல்கத்தா காங்கிரசிற்குச் செய்தியாளராகச் சென்ற போது, இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த நிவேதிதா தேவி என்னும் தாய்த் துறவியைச் சந்திக்க நேர்ந்தது பாரதிக்கு.

பாரதியின் மனத்திலிருந்த பக்திக் கொள்கை - நிவேதிதா தேவியாரின் சந்திப்பிற்குப் பிறகு - விரிந்தும் உயர்ந்தும் கிளைத்தது.

**"பாரதியாரின் மனத்திலே முன்னமேயே முளைத்திருந்த கோட்பாடுகள், நிவேதிதா தேவியைச் சந்தித்ததன் மூலம் புதிய வலிமையும், உறுதியும் பெற்றன."**

(ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை: பக்கம் 76)

அ.ச.ஞானசம்பந்தன் அவர்களோ வேறொரு காரணத்தை ஆய்ந்து சொல்லுகிறார்:

**"தேசபக்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பாடல்கள் பாடித் தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பி நிமிர்ந்து நிற்குமாறு செய்த பாரதியாரை - புற நோக்கிலேயே வாழ்நாளைக் கழித்த பாரதியாரைத் திசை திருப்பி அகநோக்கில் செலுத்திய பெருமை மகான் அரவிந்தரைச் என்று தெரிகிறது."**

(இன்றைய இலக்கியம் எனும் நூலில் 32ஆம் பக்கத்தில் காணப் பெறும் செய்தி இது)

பாரதியின் பக்தி உணர்வுக்குத் துணையாகவும் தூண்டு கோலாகவும் இருந்தது. ஆழ்ந்த வடமொழிப் பயிற்சியும் மகான்களோடு அவருக்கிருந்த தொடர்பும், சித்தர்களோடு அவர் கொண்ட ஈடுபாடும் காரணம் எனலாம்.

**"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தா ரப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்."**

-என்று பாரதி பாடுவதற்கும், பின்னாளில் கீதையை மொழி பெயர்த்ததற்கும் இதுவே அடிப்படைக் காரணங்களாகும்.

பழங் கிரேக்க, உரோமானிய இலக்கியங்களில் புலனுகர்ச்சியே பாடப்பட்டு வந்தது. கிறித்துவ சமயத்தின் தரக்கத்திற்குப் பிறகு புலனடக்கம் வற்புறுத்தப்பட்டது.

பழந்தமிழரும், புலனுகர்ச்சியே ஈடுபட்டுக் காதலையும், வீரத்தையும் பற்றிக் கவிதை செய்தனர்.

பௌத்த, சமண மதங்களின் தாக்கம் புலனுகர்ச்சியைப் புலனடக்கமாக மாற்றும் தத்துவப் பார்வைகளைத் தமிழ் இலக்கியத்திற்கு தந்தது.

பாரதியின் முப்பெரும் பாடல்களான கண்ணன் பாட்டும், குயில் பாட்டும், பாஞ்சாலி சபதமும் 1912 ஆம் ஆண்டு வெளிவந்தன.

அவை வெளிவந்த காலத்திலேயே, பாரதியின் விடுதலை வேட்கைப் பாடல்களோடு முற்றிலும் மாறுபட்ட உடன் விளைவுகளை உணர்த்தின.

**"குயில் பாட்டையும் கண்ணன் பாட்டையும் நோக்க, பாரதியின் நாட்டுப் பாடல்கள் சிறப்பில் குறைந்தவையே. இவ்விரண்டு பாடல்களையும் அவர்தம் கவிதைப் படைப்பின் உச்சி எனலாம்!"**

(பாரதி பாநிலை: பக்கம் 107)

- என்கிறார் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம்.

சில உடன் விளைவுகளுக்காகப் பாடப்பட்ட நாட்டுப்பாடல்கள் அந்த விளைவுகளுக்குப் பிறகு வீழ்ந்து போகலாம். ஆனால் நிலையான அழியாத உணர்வுகளின் அணிவகுப்பாக இருக்கும். கண்ணன்பாட்டு போன்றவையே பாரதியின் நிலைபேற்றுக்குச் சான்று தர முடியும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

377

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# மதங்களும் மருத்துவமும்...

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

உலகினதும் ஏன் இந்த அண்டசராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது energy என்று சொல்லப்படுகின்ற சக்தி என்பது உலகறிந்த உண்மை. சக்தி இன்றி எதுவும் இயங்க முடியாது. அந்த சக்திதான் சிவனின் சரிபாதி என்றும் அவள்தான் அனைத்தையும் இயக்கிக்கொண்டிருக்கிறாள் என்றும் இந்து மதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

மருத்துவக்கலையை ஆயகலைகள் அறுபத்தினான்கில் ஒன்றாக வகைப்படுத்தியிருக்கிறார்கள். மனிதனின் சிந்தனை ஓட்டத்தில் ஏற்படும் குழப்பமான நிலையே பல உடல் சம்பந்தமான அறிகுறிகளுக்கும் நோய்களுக்கும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன என்பதை பல ஆய்வுகள் உறுதி செய்கின்றன. அனைத்து மதங்களுமே மனிதனின் சிந்தனை ஓட்டத்தை நெறிப்படுத்தி சுகப்படுத்தும் அற்புதமான மருத்துவக்கலையை கற்பித்து நிற்கின்றன. எல்லா மதங்களிலுமே அற்புதமான மருத்துவக் கருத்துக்கள் பொதிந்திருக்கிறன்றன.

தற்போதய மருத்துவ உலகு நோய்த்தடுப்பு முறைகளிலேயே அதிதீவிர கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது. உலக சுகாதார செலவினங்களிலேயே பெரும்பகுதி நோய்த்தடுப்பு மருத்துவத்தை நோக்கி திசை திருப்பப்பட்டிருக்கிறது. மதங்கள் இந்த நோய்ததடுப்பு மருத்துவம் சம்பந்தமான தெட்டத்தெளிவான கருத்துக்களை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி வருகின்றது.

நவீன மருத்துவமுறைப்படி ஒருவர் நோய்வாய்ப்படுவதை தவிர்ப்பதற்கு சில அடிப்படை அறிவுறுத்தல்களை முன்வைப்பது வழக்கம். அவற்றின் சில முக்கியமான அம்சங்களாவன. தினமும் ஒழுங்கான உடற்பயிற்சி. இதனை காலையில் செய்து கொள்வது சிறந்தது.

மாச்சத்து அதிகமுள்ள உணவுவகைகளை குறைத்து புரதச்சத்து மற்றும் நார்த்தன்மையுள்ள உணவுவகைகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் மேலதிக உணவைத் தவிர்த்தல். வீட்டுச் சுற்றாடலையும் உடலையும் சுத்தமாக பேணுதல், புகைத்தல், மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் போன்றவற்றை தவிர்த்தல், சுத்தமான உடைகளையும் அங்கிகளையும் அணிதல்.

விட்டமின் D தொகுப்பிற்காகவும் உடற்சுகாதாரத்திற்காகவும் மெல்லிய சூரிய ஒளியில் நடமாடுதல், ஒழுங்கான மன அமைதிக்கான நடைமுறைகள் மற்றும் சுவாசப் பயிற்சி போன்றவற்றை பின்பற்றுதல்.

இந்த நடைமுறைகளை கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், இருதய நோய்கள், கிருமித் தொற்றுகை, மன அழுத்தம் அதிகரித்த கொலஸ்ரரோல், நிறை அதிகரிப்பு போன்ற பல நோய்கள் ஏற்படாமல் தடுக்க முடியும். இந்த அடிப்படை சுகாதார அறிவுரைகள் அனைத்தையும் மதங்கள் தமது மத அனுட்டான முறைகளில் அப்படியே குறிப்பிட்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

உதாரணமாக தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறைவணக்கம் செய்ய வேண்டும். என்று இந்துமதம் சொல்லுகிறது. இங்கே உடைச்சுத்தம், உடல்சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன. பஞ்சமாபாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றன. இந்த பஞ்சமாபாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பல கொடிய தொற்றுநோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும். விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விட்டமின்களும் கனியுப்புக்களும் நார்ப்பொருட்களும் இருப்பதுடன் இது உடல்நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்ககூடிய ஒரு நிறை உணவாகவும் விளங்குகிறது.

சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனைநோக்கி நமஸ்காரம் செய்யும் ஒரு முறையாகும். இதனையே மேலைத்தேச நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வருகின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு, பல் சம்பந்தமான நோய்களைத் தடுக்க முடியும்.

எனவே அன்றுதொட்டு சுகாதார மருத்துவ அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் மதங்களே செய்து வந்திருக்கின்றன. மத ஈடுபாடும் ஆன்மீக ஈடுபாடும் மக்களுக்கு ஒரு ஆரோக்கியமாக பாதையை காட்டி நிற்கின்றன.

கடவுளைப் பக்தியுடன் மனமுருகி, மனம் ஒருமித்து தியானித்து வழிபடும் முறை அன்று தொட்டு எல்லா மதங்களிலுமே பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பல தீமைகள் நீங்கும், நாம் காப்பாற்றப்படுவோம், சுகம்பெறுவோம், பல நல்ல விடயங்கள் நடைபெறும், மனம் சாந்திபெறும் என்ற நம்பிக்கை, மதநம்பிக்கை உடைய அனைவரது மனங்களிலும் குடிகொண்டிருக்கிறது. இவை உண்மைதானா என்ற கேள்வியும் பலரது மனங்களிலே எழத்தான் செய்கிறது. ஆனால் இவை உண்மை என ஆராச்சிகள் நிரூபித்து வருகின்றன.

மனம் ஒருமித்து மனமுருகி தியானித்து வணங்குவது என்பது Meditation, Realization சுவாசப்பயிற்சி என்ற மருத்துவ விஞ்ஞானப்பதங்களுக்குள் அடங்குகிறது. இவற்றில் ஏற்படும் அனுகூலங்கள் பல இவற்றை ஒழுங்காகச் செய்துவந்தால் மனப் பாரம் குறைவதுடன் பல கொடிய நோய்களிலிருந்தும் காப்பற்றப்படுவதுடன் உடலில் நல்ல பல மாற்றங்கள் நடப்பதற்கும் இது வழிகோலும் என்று விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது மதவழிபாட்டு முறைகள் மனிதனை உடற்பலமும் ஆன்மிக பலமும் பொருத்தியவனாக ஒரு ஆரோக்கியமுள்ள மனிதனாக வாழ்வதற்கு வழிசமைத்து நிற்கின்றது.

நோய்த்தடுப்பு மருத்துவம் சம்பந்தமாக மட்டும் மதங்கள் வழிகாட்டி நிற்கவில்லை. நோய்களை குணமாக்கும் மருத்துவத்திலும் மதங்கள் பெரும் பங்காற்றி இருக்கின்றன. ஏன் தற்பொழுது ஆற்றிக்கொண்டிருக்கின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சைவச் சித்தர்களாலும் ஞானிகளாலும் நோயை குணமாக்கும் சில இரசாயனப் பதார்த்தங்களும் கனியுப்புக்களும் உலோகங்களும் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. வேதகாலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உபவேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்படிருக்கின்றன.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திர சிகிச்சைகள் நாடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்பு கத்திகளை பயன்படுத்தி இருக்கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்புவலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக பாதுகாப்பான செப்புக் கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

அதர்வண வேதத்தின் உபவேதமாகிய ஆயுர்வேத மருத்துவத்தை சில நூல்கள் தமிழர்களின் மருத்துவமாகவும் சித்தரித்திருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சிமுறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவ சித்தர்களே இன்றும் இந்த யோகாசனப் பயிற்சிமுறை பல தொற்று நோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும் பங்காற்றி வருகிறது.

(தொடரும்)

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தத்திற்கு மத்தியில்

# காசாவில் பரவிவரும் நோய்கள்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(காசா)

**இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தங்களுக்கு நடுவில் காசாவில் நோய்கள் அதிகம் பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.**



குழந்தைகளிடம் மூளைக் காய்ச்சல், சின்னமம்மை, மஞ்சள் காமாலை போன்றவையும் அதிகளவில் பதிவாகியுள்ளன.

நவம்பர் 29 முதல் டிசெம்பர் 10 வரை 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் வயிற்றுப்போக்கு 66 சதவீதம் அதிகரித்து 59,895 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு ஏனைய மக்களில் 55 சதவீதம் வயிற்றுப்போக்கு அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை இஸ்ரேலின் குண்டுகள் மற்றும் தோட்டாக்களில் இருந்து தப்பிய காசா பகுதி மக்கள், தங்கள் தற்காலிக தங்குமிடங்களில் கடுமையான குளிர்கால மழை மற்றும் உணவு, குடிநீரின் கடுமையான பற்றாக்குறைக்கு மத்தியில் நோய்களின் பரவலை அதிகளவில் எதிர்கொண்டுள்ளனர்.

நூறாயிரக்கணக்கான மக்கள் கைவிடப்பட்ட கட்டடங்கள், பள்ளிகள் மற்றும் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் கழிவறை அல்லது குளிக்க தண்ணீர் வசதியின்றி திறந்த வெளியில் தூங்குவதாக உதவிப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டிசெம்பர் 10 முதல் உலக சுகாதார ஸ்தாபனம் புள்ளி விபரங்களின்படி, காசாவின் 36 மருத்துவமனைகளில் 21 மூடப்பட்டுள்ளது. 11 மருத்துவமனைகள் ஓரளவு செயற்படுகின்றன. மற்றும் 4 மருத்துவமனைகள் குறைந்த அளவு செயற்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இரு ரயில்கள் மோதி விபத்து சுமார் 500 பேர் படுகாயம்



(பீஜிங்)

சீனாவில் தண்டவாளத்தில் நின்றுகொண்டிருந்த ரயில் மீது மற்றொரு பயணிகள் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவின் பீஜிங் மாகாணம் ஷங்பிங் நகரில் இருந்து புறப்பட்ட பயணிகள் ரயில் ஒன்று தண்டவாளத்தில் பனி படர்ந்திருந்ததால் தானியங்கி பிரேக்கிங் அமைப்பால் நடுவழியில் நிறுத்தப்பட்டது.

அப்போது, அதே தண்டவாளத்தில் மற்றொரு பயணிகள் ரயில் வந்துள்ளது. அந்த ரயில் நின்றுகொண்டிருந்த ரயில் மீது வேகமாக மோதியது.

தண்டவாளத்தில் பனி படர்ந்திருந்ததால் பின்னால் வந்த ரயிலில் பிரேக் பிடித்தும் ரயில் சறுக்கிக்கொண்டு நின்றுகொண்டிருந்த ரயில் மீது மோதியுள்ளது.


இந்த விபத்தில் 2 ரயில்களில் பயணித்த 500 இற்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்த விபத்தில் 102 பேருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# காட்டுத்தீயால் வெளியேறிய காபனின் அளவு மிக அதிகம்

## ஆபத்தான நாடாக மாறிய கனடா



(ஒட்டாவா)

காட்டுத் தீ காரணமாக கனடா உலகிற்கு மோசமான பங்களிப்பினை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீ காரண மாக சுற்றுச்சூழல் கூடுத லாக மாசடைந்த நாடாக கனடா அடையாளப்படுத் தப்பட்டுள்ளது.

உலக அளவில் இந்த ஆண்டில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக வெளியிடப்பட்ட கார்பனின் அளவு கனடாவில் மிக அதிகம் என தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீ காரணமாக உலகளாவிய ரீதியில் வெளியிடப்பட்ட கார்பனில் 23 வீதமானவை கனேடிய காட்டுத்தீயினால் வெளியிடப்பட்டுள்ளது.

காட்டுத் தீ காரணமாக காற்றின் தரம் மாசடைந்துள்ளதுடன், சுற்றுச் சூழலுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த 2023 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான காட்டுத் தீ பரவுகை கனடாவில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆண்டில் கனடாவில் காட்டுத் தீ காரணமாக 480 மெகாதொன் எடையுடைய கார்பன் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ், கொலம்பியா, அல்பேர்ட்டா, நோவாஸ்கோஷியா, கியூபெக் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடுமையான காட்டுத் தீ நீண்ட நாட்களாக நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இந்தியாவுடனான உறவை முறித்துக் கொள்ளும் மாலைதீவு

(மாலே)

இந்தியாவுடனான நீரியல் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இருந்து மாலைதீவு வெளியேறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி மாலைதீவுக்கு பயணமான போது கையெழுத்தான ஒப்பந்தத்திலிருந்தே இப்போது மாலைதீவு விலகியுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய கடற்படை, மாலைதீவில் விரிவான நீரியல் வரைவு ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறும் முடிவை மாலைதீவு அதிகாரிகள், இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் மாலைதீவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் முகமது முய்சு வெற்றி பெற்று பதவி ஏற்றதன் பின்னர், சீனாவின் ஆதரவாளரான அவர் மாலைதீவில் இருந்து இந்தியப் படைகளை உடனே வெளியேறுமாறு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையை கோழைத்தனமென கருத வேண்டாம் தேசிய தேர்தல்களில் வெற்றி பெறுவோம்

## பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

விமர்சனங்களை கண்டு பொறுமையாக இருப்பதால் எம்மை கோழைத்தனம் என்று கருத வேண்டாம். மக்களாணையுடன் மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவோம்.

கொவிட் பெருந்தொற்று தாக்கம், பயங்கரவாதம் ஆகிய உயிரச்சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களை ராஜபக்ஷக்களே காப்பாற்றினார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் பொதுஜன பெரமுனவே ஆட்சியமைக்கும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் நிதியமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு சுஹததாஸ உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2016 ஆம் ஆண்டு பாரிய சவால்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்டு பாரம்பரியமான அரசியல் கட்சிகளை வீழ்த்தி சகல தேசிய தேர்தல்களிலும் நாங்கள் வெற்றி பெற்றோம். ராஜபக்ஷக்களுக்கு எதிராக கடந்த ஆண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட சகல வன்முறைகளையும் மக்களாணையுடன் முறியடித்து வெற்றி பெற்றுள்ளோம்.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள சகல தேசிய தேர்தல்களிலும் நாங்கள் வெற்றி பெறுவோம். பொதுஜன பெரமுனவே பலமான அரசியல் சக்தியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஆட்சியில் உள்ளபோதும் ஆட்சியில் இல்லாத போதும் நாங்கள் எவர் மீதும் வைராக்கியம் கொள்ள வில்லை. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கடந்த ஆண்டு அரசியல் பழி தீர்க்கப்பட்டது. எமது கட்சி ஆதரவாளர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றுக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை.

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தை நிறைவு செய்து ராஜபக்ஷக்களே நாட்டை அபிவிருத்தி செய்தார்கள். இந்த உரிமையை எவருக்காகவும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. சமூக வலைத்தளங்களில் எம்மீது சேறு பூசப்படுகிறது. நாங்கள் பல விமர்சனங்களுக்குள்ளாக்கப்படுகிறோம்.

விமர்சனங்களை கண்டு அமைதியாக இருப்பதால் எவரும் எம்மை கோழைகள் என்று கருதக் கூடாது. சிங்கத்தை சீண்டினால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை எம்மை விமர்சிப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எமது அரசியல் எழுச்சி அடுத்த ஆண்டு உறுதிப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# ராஜபக்ஷக்கள் பதுக்கிய நிதியை முதலில் மீட்டெடுங்கள்

## வரி அதிகரிப்பிற்கான தீர்வு இதுவே என்கிறார் சந்திரிகா



(கொழும்பு)

நடுத்தர வர்க்கத்தினருக்கு வரி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு முன், ராஜபக்ஷ குடும்பத்திடமிருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனவரி மாதம் முதல் வரி அதிகரிப்பினால் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட உள்ளதாகவும் நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் மீது வரி விதிக்கப்படக்கூடாது.

ராஜபக்ஷ குடுப்பத்தினர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பதுக்கி வைத்துள்ள நிதியை மீட்பதே இதற்கான தீர்வாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளதுடன் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் குறைந்த வரிவீதத்தை சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# விடைபெற்றார் கோபால் பாக்லே

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையுடன் அப்பதவியிலிருந்து விடை பெற்றிருப்பதுடன், அடுத்ததாக அவர் அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோபால் பாக்லே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராகக் கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், அவரது காலப்பகுதியில் இலங்கை - இந்திய இருதரப்பு உறவில் பல்வேறு "மைல்கல்" அடைவுகள் எட்டப்பட்டன. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2992


### சர்மா




### சச்சித்




### ஆஸா




### லத்திகா




### அனிஸ்ரன்

மனைவியார் வாட்ஸாப்பில் அனுப்பிய ஷாப்பிங் லிஸ்ட்:

சர்க்கரை: 3 கிலோ
தனியா: 1/2 கிலோ

நானும் 3கிலோ சக்கரை வாங்கிட்டு, "தனியா" 1/2 கிலோ சக்கரை வாங்கிட்டு போனேன்.

காலைல இருந்து இன்னும் என்னை திட்டிகிட்டே இருக்கா. சொன்னததான வாங்கினேன்.

எதுக்கு திட்றானே தெரியல?😂😂

### கௌதமி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும்.

– பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆட்சியைக் கைப்பற்றும் ஆசையில் மகிந்த தரப்பு

பதவி ஆசை யாரைத்தான் விட்டது. பதவியில் இருந்தபோது மக்களால் ஓட ஓடத் துரத்தப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் மீண்டும் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றும் ஆசையில் அதற்கான வியூகத்தை அமைத்து வருகின்றனர்.

பதவியில் ஆசைப்படுவது என்பது வேறு. பதவிக்கு மீண்டும் தாம் வருவோம் என்று நினைப்பது வேறு.

நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழிபேதமின்றி ஒன்றுதிரண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரை விரட்டியடித்த வரலாறு இலங்கையில் முன்பு ஒருபோதும் நடந்ததில்லை.

அதுதவிர, நாட்டை விட்டுத் தப்பியோடிய அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலகில் எந்த நாட்டிலும் தங்கி நிற்க முடியாத அவலத்தில் இருந்ததும் அறிந்ததே.

ஆம், இலங்கையை விட்டு வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷவை எந்த நாடும் ஏற்றுக் கொள்ளவோ அன்றி அவருக்கு அடைக்கலம் கொடுக்கவோ மறுத்துவிட்டன.

சில நாடுகள் ஒரு சில நாட்கள் மட்டும் தமது நாட்டில் தங்குவதற்கு அனுமதி கொடுத்தன.

ஆக, இலங்கை மக்களால் துரத்தப்பட்டவர்கள், உலக நாடுகளால் ஒதுக்கப்பட்டவர்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்று கர்ச்சிக்கின்றனர் எனில் இதற்குக் காரணம் யார் என்று அறிந்தால் அங்கும் பதவி ஆசை கொண்ட ஒருவரே முன்னிற்கிறார்.

ஆம், ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க, மகிந்த தரப்பைக் காப்பாற்றுவதற்கு முன்னின்றதால் வந்த வினைதான் இது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் என உயர் நீதிமன்றம் அறிவித்த பின்பும் அது தொடர்பில் விளக்கம், விசாரணை என எதுவும் நடத்தாமல் விடுவதென்பது ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு அழகல்ல.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் மௌனம் சாதிப்பதன் நோக்கம் அவர்களால் தனக்குத் தரப்பட்ட ஜனாதிபதிப் பதவிக்கான கைமாறு என்பது புரிதற்குரியது.

ஆனால் ஒரு விடயத்தை இங்கு கூறித்தானாக வேண்டும். அதாவது அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமென்று நம்புகின்ற ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் தனக்கு ஆதரவு வழங்குவர் என்றும் நம்புகின்றார்.

இங்குதான் ஒரு அரசியல் அனுபவசாலி தோல்வி கண்ட இடம் உருவாகிறது.

உண்மை. மொட்டுக்கட்சியினர் ஒருபோதும் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தமாட்டார்கள். அவ்வாறு நிறுத்துகின்ற எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் இல்லை.

மாறாக ராஜபக்ஷ தரப்பில் ஒருவரே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்.

இங்குதான் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தலை நடத்துகின்ற வியூகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயார் செய்கிறார்.

எதுஎவ்வாறாயினும் போர்க்குற்றம் புரிந்த வகையிலும் நாட்டைச் சூறையாடிய குற்றச்சாட்டின் பேரிலும் ராஜபக்ஷ தரப்பினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படாதவரை நாட்டை ஆளும் ஆசையும் அவர்களிடம் இருந்து விலகப் போவதில்லை.

# பாதுகாப்புப் படைகளின் பொறுப்பை யாராலும் மட்டுப்படுத்த முடியாது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் பாரிய பொறுப்பு பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும், அதில் தலையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அதேவேளை மக்களின் இறைமையையும் இலங்கையின் தனித்துவத்தையும் பாதுகாக்கும் பொறுப்பும் கூட பாதுகாப்புத் தரப்பினருக்கு உண்டு என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன மற்றும் மத ரீதியாக எவரேனும் செயற்பட முற்பட்டால் அது இலங்கையின் தனித்துவத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை (16) முற்பகல் தியத்தலாவ இலங்கை இராணுவ கல்வியியற்கல்லூரியின் கெடட் அதிகாரிகள் விடுகை அணிவகுப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் இதனைக் குறிப்பிட்டார்.

தியத்தலாவை இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் இராணுவ மரியாதை வழங்கி பெருமையுடன் வரவேற்கப்பட்டார்.

தேசத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் வீரம் மிக்க தலைவர்களை உருவாக்கிய இராணுவத்தின் சிறந்த உத்தியோகத்தர் பயிற்சி நிறுவனமான தியத்தலாவ இராணுவ கல்வியியற் கல்லூரியின் 98ஆவது விடுகை அணிவகுப்பு நிகழ்வு இதுவாகும்.

மேலும், பயிற்சியை நிறைவு செய்த 274 கெடட் உத்தியோகத்தர்கள் நேற்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இதன் போது வெளிநாடுகளைச் சேர்ந்த 6 கெடட் உத்தியோகத்தர்களும் பயிற்றுவிக்கப்பட்டு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் கலந்துகொண்டு கெடட் உத்தியோகத்தர்களின் விடுகை அணிவகுப்பை பார்வையிட்டதுடன், திறமை வாய்ந்த கெடட் அணிக்கு விருதினையும், கெடட் வீரர்களுக்கு வாளையும் வழங்கினார்.

1972ஆம் ஆண்டு ஒக்டோபர் 14 ஆம் திகதி, அப்போதைய யுத்த பயிற்சி நிலையம் என்று அழைக்கப்பட்ட இந்த கல்வியியற் கல்லூரிக்கு ஆற்றிய விலைமதிப்பற்ற மற்றும் போற்றத்தக்க சேவைக்காக முதல் முறையாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த வில்லியம் கோபல்லவ ஜனாதிபதி வர்ணங்களை வழங்கினார்.

மேலும், 1997 ஜூன் 20ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால், அந்த ஜனாதிபதி வர்ணங்கள் இலங்கை இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு மீள்வழங்கல் மற்றும் புதிய கல்வியியற் கல்லூரி வர்ணங்களும் வழங்கப்பட்டன.

25 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டாவது தடவையாக நேற்று மீண்டும் வர்ணங்களை வழங்கிவைத்தார். (ம-7)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய நடைமுறை அமுல்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி முக அடையாளம் காணும் முறைமையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை ஒழிப்பதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமான நிலையத்தின் வெளியேறும் மற்றும் நுழைவு முனையங்களில் 8 கமராக்கள் பொருத்தப்படும் எனவும் அவர்களின் முகங்களைச் சோதனை செய்வதன் மூலம் தேடப்படும் குற்றவாளிகள் உட்பட சந்தேக நபர்களை பொலிஸாரால் கைது செய்ய முடியும் என அவர் கூறியுள்ளார்.

முதற்கட்ட நடவடிக்கையாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள குற்றவாளிகளின் தரவுகளை இந்த தானியங்கி அடையாள அமைப்பில் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, 1091 குற்றவாளிகளின் தரவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன, அதில் 790 பேர் தங்கள் தரவுகளை பூர்த்தி செய்துள்ளனர்.

750 பேரின் புகைப்படங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 583 பேர் வெளிநாட்டு கடவுச்சீட்டை தயாரித்துள்ளனர். 98 பேர் வெளிநாடு சென்றுள்ளனர், 37 பேருக்கு சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 42 சொத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இளநீர் ஏற்றுமதி நாட்டில் அதிகரிப்பு

நாட்டிலிருந்து ஒவ்வொரு வாரமும் சுமார் 252,000 இளநீர் ஏற்றுமதி செய்யப்படுவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இளநீர்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் 2022 இல் இரண்டு பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு ஆறு பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்ட எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்நிலையில் இளநீர் தோட்டங்களை ஒரு பயிராக பயிரிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், உலகில் பல நாடுகள் இளநீர் பயிரிட முயற்சித்தாலும் உலகில் மிகவும் சுவையான இளநீர் இலங்கை இளநீர் என்றும், எனவே இலங்கையில் இளநீரை பிரபலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். (ம-7)

# இரத்தக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

இரத்தக் காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு 7, விஜேராம மாவத்தையில் உள்ள வீடொன்றிலேயே பெண்ணின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மித்ராணி பெர்னாண்டோ ஸ்மின் என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் அறை ஒன்றில் குப்புற விழுந்து கிடந்ததைக் காண முடிந்தது என்றும், இடுப்புப் பகுதியில் இரத்தக் காயங்கள் காணப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மரணம் கொலையா அல்லது இயற்கையான மரணமான என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

மரணத்துக்கான காரணத்தை அறிய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகும் நிலையில் மன்னாரின் தாழ்நில பிரதேசங்கள்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 72 குடும்பங்களைச் சேர்ந்த 161 நபர்கள் இடம்பெயர்ந்து தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.**





அதே நேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பதாக மன்னார் பிரதேச அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையினால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ்நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்துள்ளதுடன் பாலியாறு, பறங்கியாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் - யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கும் வாய்ப்பு காணப்படுகின்றமையினால் அவ் வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையினால் மக்கள் பாதுகாப்புடன் செயற்படுவதோடு அவசர உதவிக்கு மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தொலைபேசி இலக்கமான 023 225 0133 இற்கு தொடர்பு கொள்ளுமாறும் அதே நேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் அவசர தொடர்புகளுக்கு 076 125 8120 இலக்கத்தை பயன்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-285)

# புதுமுறிப்பு குளத்தில் மண்ணரிப்பு சீர் செய்யும் நடவடிக்கை முன்னெடுப்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தில் ஏற்பட்ட பாதிப்பினை சீர் செய்யும் நடவடிக்கை இராணுவத்தினரின் உதவியுடன் நடைபெற்றது.


புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டில் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைக்கு இடர் முகாமைத்துவ பிரிவு தயாராகியது. தொடர் மழை காரணமாக குளக்கட்டில் ஏற்பட்ட மண்ணரிப்பு அவதானிக்கப்பட்டு, நீர்ப்பாசன பொறியியலாளர்களால் ஆராயப்பட்டுள்ளது.

ஆபத்தான நிலை ஏற்படாத நிலையை அவதானித்த பொறியியலாளர்கள், பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினருக்கு ஆலோசனை வ்ழாங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, நேற்றுக் காலை இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-5-100-316)

# முல்லைத்தீவு நீர் ஏந்து குளம் புனரமைக்கப்பட வேண்டும்

## பொது அமைப்புகள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரில் அபிவிருத்தி என்ற பெயரில் தூர்வையாக்கப்பட்டு பலவருடமாக கைவிடப்பட்ட நீர் ஏந்து குளம் காணப்படுகின்றது.

நகரை அழகுபடுத்தல், அபிவிருத்தி என 10 வருடங்களுக்கு முதல் தொடங்கப்பட்ட வேலைகள் 10 ஆண்டுகள் கழிந்தும் நிறைவு பெறாமல் காணப்படுகின்றது.


அந்த வகையில் நீர் ஏந்து குளம் புனரமைப்பு பணிகளும் தடைப்பட்டது. இதற்கான நிதி திரும்பிச் சென்றமையே வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் கைவிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்தினை மீளத் தொடங்கி செயற்படுத்த வேண்டும் என்பது நகர பொது அமைப்புகளின் கோரிக்கையாகும்.

முல்லைத்தீவு நகரம் 1990 ஆம் ஆண்டில் இருந்து போரினாலும் இயற்கை பேரிடர்களினாலும் பேரழிவினை சந்தித்த நிலையில் சரியான திட்டமிடல்கள் இல்லாததன் காரணமாக வட்டுவாகல் பாலம் புனரமைப்பு, வெளிச்ச வீடு மீள அமைக்கப்படாமை என்பதன் தொடர்ச்சியாக நகரத்தின் நீர் ஏந்து குளத்தின் புனரமைப்புப் பணிகளும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என பொது அமைப்புகள் விசனம் தெரிவித்தன. (நி-5-350)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு பாடசாலைகளுக்கு வலைப் பயிற்சி திடல்கள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. மல்லாவி மத்திய கல்லூரி மற்றும் வெலிஓயா அத்த வட்டுனவா மகாவித்தியாலயத்திற்கு இலங்கை துடுப்பாட்ட நிறுவனத்தினால் ரூபாய் 3 மில்லியன் பெறுமதியான 2 வலைப் பயிற்சி திடல்கள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

(படம்:-கிருஷ்ணகுமார்)





கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் பாடசாலை விவசாய மற்றும் விவசாய தொழில்நுட்ப, உணவுத் தொழில்நுட்ப, போசனைசார் அனுபவப் பகிர்வுக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (படம்:-கிருஷ்ணகுமார்)



**தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 17 ஆவது ஆண்டு தின நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.**

**(படம்:-தேவானந்தன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குவைத்...

குவைத் மன்னர் செய்க் நவாப் அல் அகமது அல் சபா தனது 86 வயதில் நேற்று காலமானார்.

உடல்நலக்குறைவால் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

பல்வேறு இஸ்லாமிய நாடுகளில் இன்னும் மன்னராட்சி முறை என்பது நடைமுறையில் உள்ளது. அந்த வகையில் குவைத் மன்னராக செய்க் நவாப் அல் அகமது அல் சபா இருந்தார்.

இவர் கடந்த 2020ம் ஆண்டு செப்ரெம்பரில் குவைத் மன்னராக பொறுப் பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## விபரீத முடிவெடு...

வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் கடந்த 7ஆம் திகதி குறித்த பெண் மண்ணெண்ணெய் உடலில் ஊற்றி தீயை பற்ற வைத்துள்ளார்.

தீக்காயத்துக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றக் காலை உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.(ம-7)

## கிழங்கை...

என்பவரே உயிரிழந்தவராவார்.

சில தினங்களுக்கு முன்னர் கார்த்திகை பூக்கொடியின் கிழங்கை உட்கொண்டிருந்த நிலையில் திடீர் சுகவீனம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இன்று ஞாயிற்றுக்கிழமை விசாரணைகளை மேற்கொள்வார். (ம-7,60)

## வடக்கு...

நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு கீழாக காணப்படுகின்ற காற்றடுக்கு சுழற்சி காரணமாக தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக கனமழை கிடைத்து வருகிறது.

இந்த மழையை பொறுத்தவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஏற்கெனவே வடக்கு மாகாணத்தினுடைய தரை மேல் நீர் பரப்புக்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுகின்ற இந்த சூழ்நிலையில் தொடர்ந்து கிடைத்து வருகின்ற கன மழை காரணமாகவும் பல்வேறு பகுதிகளில் உள்ள தாழ்நிலங்களில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புகள் இருப்பதாக அறியப்படுகிறது.

எனவே தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமானதாகும்.

மீண்டும் ஒரு காற்று சுழற்சி இலங்கையினுடைய தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தோன்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால் தொடர்ச்சியாகவும் மழை நீடிப்பதற்கான வாய்ப்புகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றது.

தொடர்ச்சியான மழை கிடைக்கும் என்பதனால் இந்த தாழ்நில பகுதிகளில் இருக்கும் மக்கள் மழைவீழ்ச்சி தொடர்பான அளவுதொடர்பில் அவதானமாக இருப்பது அவசியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## குற்றங்களை...

தாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த நடவடிக்கைக்காக பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் பொதுமக்களிடம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-7)

## முட்டை...

னம் இந்த அனுமதியினை வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## காய்ச்சல்...

சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினசரி நூற்றுக்கணக்கானோர் டெங்கு நோய்க்கான சிகிச்சையை பெற்று வருகின்றனர். இன்றும் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதனா வைத்தியசாலைக்கு அப்பால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளிகளை பராமரிக்க விடுதிகள் உள்ளன.

அதேவேளை அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் பிரதேச வைத்தியசாலை, சண்டிலிப்பாய் பிரதேச வைத்தியசாலைகளிலும் டெங்கு நோய் அறிகுறி தொடர்பிலான இரத்த பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவித்தார். (ம-7)

## இலங்...

இலங்கை வருகை தந்துள்ள 3 நாடுகளின் தூதுவர்களும் நல்லூர் நல்லை ஆதீன குரு முதல்வர் இல்லத்தில் குரு முதல்வரை சந்தித்துள்ளனர்.

சுவிட்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி சிறி வோல்ட், ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசு கொஷி ஹிடேகி (மற்றும் தென்னாபிரிக்காவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சாண்டைல் எட்வின் ஷால்க் ஆகியோர் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளனர்.

குறித்த சந்திப்பு நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவர்கள், நல்லை ஆதீன குரு முதல்வர் தேசிக ஞானசம்பந்த பிரமாச்சாரி சுவாமிகளையும், தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், ஆன்மீக சமயத்தலைவர் ரிஷி தொண்டு ஞான சுவாமிகளையும் சந்தித்துள்ளனர்.

இதன்போது வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் சமயரீதியான நல்லிணக்க விழிப்புணர்வுகள், சமயத் தலைவர்களினால் எதிர்நோக்கும் மக்கள் ரீதியான பிரச்சினைகள், இந்து சமய வளர்ச்சிக்கான அடிப்படைக்கு தேவையான விடயங்கள், கலாசார ரீதியாக எதிர்நோக்கும் விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

லக்கி 7 VIP
திகதி 2023.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 0156
F 4 8 5 7 3 4 F

தன நிதானய
திகதி - 2023.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1360
E 06 47 52 58 E
18650

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3572
சீட்டிழுப்பு திகதி 16.12.2023
R 05 10 40 62
R 58049

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.16
சீட்டிழுப்பு இலக்கம் 0639
தனுசு 16 22 36 48 தனுசு
18218 05

மஹஜன சம்பத
திகதி 2023/12/16
சீட்டிழுப்பு இலக்கம் 5330
Z 1 2 5 9 6 5

மெகா பவர்
திகதி 16/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1678
X 16 07 49 67 68
79653

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.12.2023 வெற்றி வாரம் 038 வர்ணம் நீலம்
J 2 5 4 9 2 3
78279
24,058,127.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2304 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.16 தினம் சனிக்கிழமை
03 39 61 67 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,792,660/-
11484

சனிதா
திகதி 2023.12.16 வெற்றி வாரம் 4465
08 09 23 47 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,046,956.00
39202

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4016 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.16 தினம் சனிக்கிழமை
44 46 47 59 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,900,724/-
391325

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 08 07 15 18 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 478,327,664.20
1480 சிவப்பு 2023.12.16 சனிக்கிழமை

ADA KOTIPATHI
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,579,424/-
வெற்றி வாரம் : 2130
சீட்டிழுப்பு திகதி : 2023.12.16
09 34 74 76 V
231432


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 22 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**

- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து கொள்முதல் செய்து கொள்ளமுடியும்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18257)

**077 468 3354,076 755 8606**

## விரைவு பொதிகள் சேவை



DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

070 375 0002

(18233)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் 40-55 வயதுக்குட்பட்ட நம்பிக்கைக்குரிய பணிப்பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்

(18279)

**077 958 3573**

## யாழ் மண்ணில்! புதுப்பொலிவுடன் ஆரம்பம்

**க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவு 2024, 2025 ஆம் ஆண்டுகளுக்கான வகுப்புகள் ஆரம்பம்**



P.தயாபரன்
B.COM (ACC.SPL), PGDE
பொருளியல்



N.B.கஜேன்
B.Com (Hons) M.M.Spl, Dip.in.Edu.
வணிகக்கல்வி



E.ரமணன்
BBA(Specilization in Accounting), MBA(UOJ)
கணக்கீடு

**புதிய பிரிவுகள்**
காலம் : புதன்கிழமை (20-12-2023)
நேரம் : 4.00 பி.ப

அனுமதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**0776284845 | EP Academy**
Every Little Success

வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் (லிங்கன் ஐஸ் கிறீம்)

354, 1/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C-7916)

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 285/= (Max 3Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 300/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 430/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 173/= |
| 1 Kg அரிசி மா | - 199/= |
| 450g அங்கர் பால்மா | - 1030/= ~~(1080/=)~~ |
| 400g sustagen சவ்ரயன் | - 3435/= ~~(3900/=)~~ |
| 330g கோல்ட் மாரி பிஸ்கட் | - 275/= ~~(330/=)~~ |
| 180ml Chik Shampoo | - 370/= ~~(430/=)~~ |
| 500ml Vim Liquid | - 390/= ~~(425/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= ~~(80/=)~~ |

1030/=



~~1080/-~~

(18263)

யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## உடனடி வேலைவாய்ப்பு

1. காசாளர்
2. காட்சியறை முகாமையாளர்கள்
3. விற்பனை உதவியாளர்கள்
4. களஞ்சிய பொறுப்பாளர்கள்
5. களஞ்சிய உதவியாளர்கள்
6. அலுவலக உதவியாளர்கள்

(C-7915)

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரத்தை **077 310 7823** என்ற Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அண்மையில் 22 Perches நிலம் வணிகம் மற்றும் குடியிருப்புக்கு உகந்தது. ஹோட்டல்கள், பல்பொருள் அங்காடிகள் கட்ட உகந்த இடம் தெளிவான ஆவணங்கள் கொண்டுள்ளது. K.K.S வீதியை முகப்பாக கொண்ட 1 Perch சதுர வடிவான காணியின் விலை.பேச்சுவார்த்தைக்குட்பட்டது.
(one Perch - Price Negotiable) 16,00,000/=

(18206)

**076 561 3959**

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை

VISA CONSULTANT
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.

(18234)

**077 038 5584**

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு தகைமை அல்லது விருப்பம் உடையவர்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

(18262)

**077 214 1214**

## வேலையாள் தேவை

பொதியிடல் வேலைக்கு ஆள் தேவை.

தொடர்பு

(18248)

**077 623 7956**

கோண்டாவில்

## சுயதொழில் - நடமாடும் உணவகம் வாடகை/ விற்பனை



(C-7920)

**0777 360 353**

## சிவாச்சாரியார் - குருக்கள் தேவை

சரித்திர புகழ் பெற்ற இராமபிரானால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்க ஆலயமாம் ஸ்ரீ மானாவாரி (சிலாபம்) இராமலிங்கேஸ்வரத்திற்கு ஆலய குருக்களாய் சேவை ஆற்றக்கூடிய சிவாச்சாரியார்/ குருக்கள் தேவை. குடும்பத்துடன் தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு

(C-7921)

**0777 360 353**

## பெண் வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் புத்தக, போட்டோ கொப்பி கடைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
வயதெல்லை : 18 - 40

(18237)

**076 832 3682**

## வேலை வாய்ப்பு

Pickme Taxi நிறுவனத்தில் Sales Executive வேலை செய்யக்கூடியவர் தேவை.

(JAFFNA BRANCH)

(18249)

**077 473 7737**
**076 010 6139**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org